வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 21.05.2025 புதன்கிழமை இதழ் : 142 பக்கங்கள் : 12






## வடக்கு பிரதம செயலாளராக தனுஜா முருகேசன் நியமனம்

கொழும்பு, மே. 21

வடக்கு மாகாண பிரதம செயலாளராக திருமதி தனுஜா முருகேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான இந்த நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் நேற்று வழங்கி வைத்தார்.

இலங்கை நிர்வாக சேவை மூத்த அதிகாரியான அவர் தனது கடமைகளை இந்த வாரம் ஏற்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (அ)

# வடக்கு-கிழக்கில் மக்களின் காணிகள் அபகரிக்கப்படா!

### அரசு நேற்று சபையில் அறிவிப்பு



கொழும்பு, மே 21

வடக்கு, கிழக்கில் பொதுமக்களின் காணிகள் அபகரிக்கப்பட மாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் கடந்த அமர்வின்போது தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் எழுப்பிய கேள்விக்கு விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டீ.லால்காந்த நேற்று சபையில் விளக்கமளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காணி அபகரிப்பு தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் எதுவும் வெளியிடப்படவில்லை.

காணி உரித்துகள் நிர்ணயத் திணைக்களத்தினால் காணி உரித்து தொடர்பாக வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டுள்ளது. காணிகளை அபகரிப்பதற்காக வர்த்தமானியொன்று ஒரு போதும் வெளியிடப்படவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் அச்சுறுத்தல் என முன்வைக்கும் காரணம் அவ்வாறானதல்ல.

வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக அப் பகுதியில் உள்ள 11

## அரசின் ஆட்சியை பொறுத்தே யுத்தம் தோன்றுமா என தீர்மானிக்க முடியும்!

### படைவீரர்கள் நினைவு நிகழ்வில் மகிந்த

கொழும்பு, மே. 21

அரசாங்கங்களின் ஆட்சியை பொறுத்தே எதிர்காலத்தில் யுத்த நிலையொன்று தோன்றுமா இல்லையா என்ற முடிவுக்கு வரஇயலும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் படைவீரர் நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டபோது ஊடகவியலாளர்கள் எழுப்பிய 11



## தமிழ் மக்களின் காணிகள் அபகரிப்பை வடக்கில் அரசு உடன் நிறுத்தவேண்டும்!

### ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, சுவிஸ் தூதர்களிடம் தமிழ் தேசிய பேரவை கோரிக்கை

கொழும்பு, மே. 21

வடக்கில் அரசாங்கம் தமிழ் மக்களின் காணி அபகரிப்பை உடனடியாக நிறுத்த வேண்டும். அதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, சுவிஸ் நாடுகளின் தூதுவர்களிடம் தமிழ் தேசியப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய பேரவையினர் ஐரோப்பிய ஒன்றியம், 11

## காங்கேசன் ரயில் நிலையத்திலிருந்து 764, 769 வழித்தடங்களின் பஸ் சேவை!

### மீறும் பஸ்களுக்கு எதிராக நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே. 21

764 மற்றும் 769 ஆகிய வழித்தடங்களின் சேவைகளை இன்று புதன்கிழமையிலிருந்து காங்கேசன்துறை ரயில் நிலையத்திலிருந்து ஆரம்பிக்குமாறும் அதை மீறிச் செயற்படும் பேருந்துகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் பணிப்புரை விடுத்துள்ளார்.

10.04.2025 அன்று 11

## தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல்!

### சபையில் சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 21

தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும் சம்பவங்களைத் தடுப்பதற்கு இதுவரை அரசாங்கம் போதியளவு நடவடிக்கை எடுக்கவில்லை என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ 02

## அரசாங்கத்துக்கு பதிலளிக்க பஸில் நாட்டுக்கு வரவேண்டும்

### நாமல் ராஜபக்ஷ கோரிக்கை

கொழும்பு, மே. 21

பஸில் ராஜபக்ஷ அமெரிக்காவில் இருப்பதாகவும், தற்போது தலைமறைவாக இருப்பதாகவும், நாட்டுக்கு வரமாட்டார் என்றும் அரசாங்கம் கூறிக் கொண்டிருக்கிறது. எனவே, அரசாங்கத்துக்கு 11

## இரத்த வாந்தி எடுத்த குடும்பஸ்தர் மரணம்!

### கொழும்புத்துறையில் துயரம்

யாழ்ப்பாணம், மே. 21

யாழ்ப்பாணத்தில் இரத்த வாந்தி எடுத்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த தங்கவேலு கலைச்செல்வன் (வயது 42) 11

## யாழில் திடீரென மரணித்த இளம் தவில் வித்துவான்!

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணத்தில் கிருமித் தொற்றினால் இளம் குடும்பஸ்தரான தவில் வித்துவான் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். ஆனைக்கோட்டை கூழாவடியைச் சேர்ந்த நாகையா நிரோஜன் (வயது 38) என்ற மூன்று பிள்ளைகளின் 11

## போரில் பாதிக்கப்பட்டவர்கள் நீதியை எதிர்பார்க்கின்றனர்!

### பொறுப்புக்கூறலுக்கான உறுதிப்பாட்டை அரசு நிரூபிக்கவேண்டும்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம்

கொழும்பு, மே. 21

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க பொறுப்புக்கூறலுக்கான தனது உறுதிப்பாட்டை புதிய அரசாங்கம் நிரூபிக்கவேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிரிவின் துணை பணிப்பாளர் மீனாட்சி கங்குலி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்த வார இறுதியில், இலங்கையில் உள்ள தமிழர்கள் 1983 முதல் 2009 வரை நீடித்த உள்நாட்டுப் போரில் இறந்தவர்களை அல்லது காணாமல் போனவர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்த ஒன்றுகூடினர். 11

# நாட்டை விட்டு வெளியேறிய ஒரு இலட்சம் இலங்கையர்கள்

கொழும்பு, மே. 21

2025ஆம் ஆண்டில் இது வரை ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இவ்வாறு வெளிநாட்டு வேலைகளுக்காகச் சென்றுள்ளனர்.

இந்த ஆண்டு ஜனவரி முதல் மொத்தம் 100,413 பதிவு செய்யப்பட்ட இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் வெளிநாட்டு வேலைகளுக்குச் சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அவர்களில், சுய பதிவு மூலம் வெளியேறியவர்கள் 64,150 பேரும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் மூலம் பதிவு செய்தவர்கள் 36,263 பேரும் உள்ளடங்குகின்றனர்.

இந்தக் குழுவில் 39,496 பெண்களும் 60,917 ஆண்களும் அடங்குவர்.

இந்த நிலையில், குவைத்தில் வேலைகளுக்காக அதிக எண்ணிக்கையிலான பதிவுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு 340,000 பேரை வெளிநாடுகளுக்கு அனுப்ப எதிர்பார்க்கிறோம் என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

# பிரதமர் ஹரிணிக்கு கொலை அச்சுறுத்தல்!



கொழும்பு, மே. 21

பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

மின்னஞ்சல் மூலம் அவருக்கு இவ்வாறு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜேர்மனி, நெதர்லாந்து ஐ.பி முகவரிகளை வைத்திருப்பவர்களே இந்த மின்னஞ்சல் மிரட்டலை விடுத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஆனந்த விஜயபால தெரிவித்தார். (அ)

## பிரமந்தனாறு கிராமத்தில் கழிவுநீர் வாய்க்கால் துப்பரவு

கிளிநொச்சி, மே. 21

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு கிராமத்தில், கழிவு நீர் வாய்க்கால் துப்பரவு திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

உலக உணவுத் திட்டம், சமூக அபிவிருத்தி மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு ஆகியன இணைந்து, கிளிநொச்சி மாவட்டத்தில் 6 வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றன.

37.5 மில்லியன் ரூபா செலவில் கண்டாவளை பிரதேச செயலகத்தில் இரண்டு திட்டங்களும், கரைச்சி பிரதேச செயலகத் தில் நான்கு திட்டங்களும் செயற்படுத்தப்படுகின்றன.

அதற்கமைய, கிளிநொச்சி மாவட்ட காணிப் பகுதிக்கான மேலதிக அரசாங்க அதிபர் நளாயினி இன்பராஜ், உலக உணவுத்திட்டத்தின் இலங்கைக்கான திட்ட பொறியியலாளர் சந்திர திலக உள்ளிட்டோர், கழிவு நீர் வாய்க்கால் துப்பரவு திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இதில், திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச மக்கள் என பலர் பங்கேற்றனர்.

90 பயனாளிகளை உள்ளடக்கிய மனித வலுவைக் கொண்டு குறித்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ)

## சந்திராணி பண்டாரவுக்கு எதிராக நேற்று குற்றப்பத்திரிகை தாக்கல்

கொழும்பு, மே. 21

முன்னாள் அமைச்சர் சந்திராணி பண்டாரவுக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

2019 ஆம் ஆண்டு பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகாரங்கள் மற்றும் உலர் வலய மேம்பாட்டு அமைச்சராக இருந்த காலத்தில், இடம்பெற்றதாக கூறப்படும் முறைகேடான நியமனங்கள் தொடர்பாகவே இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உலர் வலய மேம்பாட்டு அமைச்சின் திட்ட இயக்குநராக எச்.எம். சந்திரவன்ஸவை உரிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் நியமித்ததாகவும், அவரது அமைச்சின் பதவிகளுக்கு தனக்கு நெருக்கமானவர்களை சட்டவிரோதமாக நியமிப்பதில் செல்வாக்கு செலுத்தியதாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

2019 ஜனவரி 14 முதல் ஜனவரி 31 வரை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படும் சம்பவங்கள் தொடர்பான 11 குற்றச்சாட்டுகள் இந்த குற்றப்பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (அ)

## மின் கட்டணத்தை 18 வீதத்தினால் உயர்த்தவேண்டிய அவசியமில்லை

### கூறுகிறார் ஹர்ஷ டி சில்வா

கொழும்பு, மே. 21

ஜூன் முதல் டிசெம்பர் வரையிலான காலப்பகுதிக்கு மின்சாரக் கட்டணத்தை 18 வீதத்தினால் உயர்த்த வேண்டிய அவசியமில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் தள பதிவொன்றில் இதனைக் குறிப்பிட்டுள்ள அவர், 9 வீதமாக அதனைப் பராமரிக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் இது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடலொன்றை நடத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு இலங்கை மின்சார சட்டம் மற்றும் 1969 ஆம் ஆண்டு இலங்கை மின்சார சபை சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழ் ஒப்புக் கொள்ளப்பட்ட சூத்திரத்தை அரசாங்கம் கடைப்பிடிக்கவேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தியுள்ளார். (அ)

# வைத்தியர் சுட்டுப்படுகொலை: நெடுமாறன் நேற்று விடுதலை

வவுனியா, மே. 21

வவுனியாவில், வைத்தியர் முகைதீனை சுட்டுப் படுகொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய நெடுமாறன் என அழைக்கப்படும் சிவநாதன் பிரேமநாத் என்பவருக்கு வவுனியா மேல் நீதிமன்றம் மரண தண்டனை வழங்கிய நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றம் தண்டனையில் இருந்து விடுத்து, விடுதலை செய்து உத்தரவிட்டது.

மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான சசி மகேந்திரன், அமல் ரணராஜா ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த தீர்ப்பை நேற்று அறிவித்தது.

இது தொடர்பாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா, ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா ஆகியோரின் வாதங்களை ஏற்ற நீதிமன்றம், தீர்ப்பை அறிவித்தது.

வவுனியாவில் 2009 ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி, கற்குழியில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலையில் கடமையில் இருந்த வைத்தியர் சுல்தான் முகைதீன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பில் நெடுமாறன் என்று அழைக்கப்படும் சிவநாதன் பிரேமநாத் என்பவர் மீது வவுனியா மேல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

நீண்ட விசாரணைகளின் பின்னர் கடந்த 2023 ஜூன் மாதம் 8 ஆம் திகதி அன்றைய வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நெடுமாறனைக் குற்றவாளியாக கண்டு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

இந்த தீர்ப்புக்கு எதிராக கௌரி சங்கரி சட்ட நிறுவனம் சார்பில் மேன்முறையீடு செய்யப்பட்டது.

மேன்முறையீட்டு மனு மீதான விசாரணைகள் முடிவடைந்த நிலையில் நேற்று தீர்ப்புக்காக திகதியிடப்பட்டது.

அந்தவகையில் குற்றவாளிக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மாற்றிய மேன் முறையீட்டு நீதிமன்றம் குறித்த மனுதாரரை வழக்கில் இருந்து முழுமையாக விடுவித்துத் தீர்ப்பளித்தது.

மேன் முறையீட்டு வழக்கில் சட்டத்தரணி தர்மஜா தர்மராஜாவின் ஆலோசனையின் பிரகாரம், சட்டத்தரணி அன்ரன் துரைசிங்கம் ஜெயானந்தன், ஒஷதி ஹப்பு ஆராய்ச்சி, ஜனாதிபதி சட்டத்தரணிகளான கே.வி.தவராசா மற்றும் அனில் சில்வா ஆகியோர் ஆஜராகினர்.

சட்ட மா அதிபர் சார்பில், பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஆசாத் நவாவி ஆஜராகி இருந்தார். (அ)

## கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியில் சாதனையாளர் விருது வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி, மே. 21

கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியில், எப்படி வென்றோம் எவ்வாறு கற்றோம் எனும் தொனிப்பொருளிலான அனுபவப் பகிர்வும் சாதனையாளர் விருது வழங்கும் நிகழ்வும் நேற்று இடம்பெற்றது.

கடந்த உயர் தர பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் சாதனை படைத்த மாணவர்களும், பரீட்சைக்கு தோற்றவுள்ள முருகானந்தா கல்லூரி மாணவர்களும் பங்கு கொண்ட அனுபவப் பகிர்வும், சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும், கல்லூரி முதல்வர் அ.பங்கயற் செல்லன் தலைமையில் இடம்பெற்றது.

இதில், கிளிநொச்சி மாவட்ட காணிப் பகுதிக்கான மேலதிக அரசாங்க அதிபர் நளாயினி இன்பராஜ், கிளிநொச்சி வடக்கு வலயக் கல்வி பணிப்பாளர் சிவனருள்ராஜா, நெல்லியடி மத்திய கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் கிருஷ்ணகுமார் மற்றும் அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் பங்கேற்றனர். (அ)

## தேசிய பாதுகாப்புக்கு...

தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மொழிமூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்- நாட்டில் சட்ட ஒழுங்கை நிலைநாட்டுவது அரசாங்கத்தின் அடிப்படைப் பொறுப்பு என்ற போதிலும், நாடு முழுவதும் இடம்பெறும் துப்பாக்கிச் சூடு, கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்களைத் தடுப்பதற்கு அரசாங்கம் தவறியுள்ளது.

பல தடவைகளில் தாம் உட்பட சக பாராளுமன்ற உறுப்பினர்கள் இது குறித்து கேள்வி எழுப்பியுள்ள போதிலும் உரிய தீர்வுகள் இதுவரை கிடைக்கவில்லை.

கடந்த 8 மாதங்களில் 79 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 52 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாட்டில் அதிகரிக்கும் வன்முறைக்கும் தேசிய பாதுகாப்புக்கும் தொடர்பு இருப்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லையா? மக்களின் பாதுகாப்பிலேயே நாட்டின் பாதுகாப்பும் தங்கியுள்ளது.

போதைப்பொருள் பிரச்னைகளை முன்னிறுத்தி சில குழுக்களுக்கு இடையிலான மோதலில் அவர்களது குடும்பத்தினரும், சாதாரண மக்களும் பாதிக்கப் படுகின்றனர்.

அத்துடன், கடுமையான உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர் சிலருக்கு தங்களது அரசியலை முன்னெடுக்க முடியாமல் போயுள்ளதுடன், அச்சுறுத்தல்களால் அதிகாரிகளும் பதவி விலகுகின்றனர்.

அண்மையில் துசித ஹலொலுவவும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்தார்.

எவ்வாறாயினும், அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள மக்கள் பிரதிநிதிகளையும் மக்களையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் தெளிவான திட்டமொன்றை முன்வைக்க வில்லை.

எனவே, எதிர்காலத்தில் இது குறித்த எவ்வாறான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கப்போகிறது? - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
21.05.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இரண்டு ஒன்றல்ல

வடக்கிலும் தெற்கிலும் இனவாதம் தலைதூக்குவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருக்கின்றார். தெற்கின் அரசியல் சூழலை வடக்குடன் ஒப்பிடுவது எந்த வகையில் சரியான அளவீடாக இருக்குமென்பது முதல் கேள்வி - இரண்டாவது, கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது வடக்கில் பெரும்பான்மையான தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கே வாக்களித்திருந்தனர். அப்போது ஆதரித்தவர்கள் ஏன் உள்ளூராட்சித் தேர்தலின் போது, தமிழ் கட்சிகளை நோக்கி அதிகம் சாய்ந்திருக்கின்றனர்? இந்தக் கேள்விக்கு நியாயமான பதிலை தேட வேண்டிய தேசிய மக்கள் சக்தியின் கடமையல்லவா?

கடந்த பொதுத் தேர்தலுக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கும் இடையில் வெறும் சில மாதங்கள்தான் உண்டு. ஆனால், இதற்கிடையில் உங்களை நோக்கி வந்த மக்கள், மீண்டும் தாங்கள் நிராகரித்த தமிழ் கட்சிகளை நோக்கி ஏன் சென்றனர்? இதற்கான காரணத்தை ஆராயாமல் முன்னைய ஆட்சியாளர்கள் நோக்கியமை போன்று, அனைத்தையும் கறுப்பு வெள்ளையாக நோக்குவது உங்களை முன்னைய ஆட்சியாளர்களிலிருந்து வேறுபடுத்தும் ஜனாதிபதி அவர்களே?

இப்போதும் ஜனாதிபதி அநுரகுமாரவின் மீது மதிப்புக் கொண்டிருக்கும் தமிழ் மக்களே அதிகம், ஆனால், ஜனாதிபதியை பார்ப்பது போன்று தேசிய மக்கள் சக்தியை பார்ப்பார்களா என்பதில் வித்தியாசம் உண்டு. அதேவேளை தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் முன்னேற்றகரமான சில விடயங்கள் இடம்பெறாதபோது ஜனாதிபதி அநுரகுமாரவின் மீதான பார்வையும் காலப் போக்கில் மாறக் கூடும்.

தமிழ் கட்சிகள் சில தேர்தல் காலத்தில், தமிழ் மக்களின் வாக்குகளை கவர்வதற்காக கூறும் அனைத்து விடயங்களையும் நாம் கருத்தில் கொள்ளவில்லை. ஆனால், சாத்தியமான விடயங்களில் உங்கள் அரசாங்கம் முன்னேற்றகரமான விடயங்கள் சிலவற்றை நிரூபிக்க வேண்டுமல்லவா - ஆனால், அதில் இதுவரையில் முன்னேற்றங்கள் ஏற்பாடாதபோதுதான், அரசாங்க எதிர்ப்பாளர்கள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றனர் - இதனை ஜனாதிபதி கவனத்தில் கொள்ள வேண்டும்.

முதலில் தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் பிரச்னையுண்டு - அதற்கான தீர்வு கட்டயாமானது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமல்லவா. அரசியலமைப்பில் இருக்கும் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு முன்நோக்கி செல்வதில் நீங்கள் இதுவரையில் ஒரு சாதகமான குரலையும் பதிவு செய்யவில்லையே - இப்படியான காரணங்களால்தான் ஆரம்பத்தில் தேசிய மக்கள் சக்தியுடன் தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட தமிழர்கள் கூட, தங்களுடைய ஆதரவு சரியானதுதானா என்பதை நிறுத்துப் பார்ப்பதற்கு நிர்பந்திக்கப்படுகின்றனர்.

ஆனால், தெற்கில் என்ன நடக்கின்றது - நீங்கள் தமிழ் மக்களுக்கு எதனையும் வழங்கிவிடக் கூடாது, நினைவுகூர்தல்களை அமைதியாக முன்னெடுப்பதையும் அனுமதிக்கக் கூடாது என்றல்லவா குரல்கள் வருகின்றன. உண்மையில் அதுதான் இனவாதத்தின் கோர முகம். ஒரு குடிமகன் தனக்கான ஓர் அரசியல் கட்சியை தெரிவுசெய்வது இனவாதமல்ல ஆனால், ஏனையவர்களை வெறுக்குமாறு துவேச பிரசாரங்களை முன்னெப்பதுதான் இனவாதமானது.

அவ்வாறான இனவாதம் எந்தப் பக்கத்தில், எவ்வாறான நியாயங்களை முன்வைத்தாலும் அது தவறானதுதான். அதனை நாமும் வன்மையாக எதிர்க்கின்றோம். ஆனால், தமிழ் மக்களின் அடிப்படையான பிரச்னைகளை தீர்க்கும் விடயத்தில், வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதில் முன்னேற்றங்கள் காண்பிக்கப்பட்டது போதாது, அனைத்துமே மிகவும் மந்த கதியில் நடைபோடுகின்றது. இதன் காரணமாகவே தேசிய மக்கள் சக்தியை ஆதரிப்பதில் என்ன நன்மையுண்டு என்னும் கேள்வி சாதாரண மக்கள் மத்தியில் துளிர்விட்டுவிட்டது. அதன் முதல் வெளிப்பாடுதான் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள்.

# சங்கிலிய மன்னனின் 406 ஆம் நினைவு தினம்



*யாழ்ப்பாணம், மே. 21*

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த இரண்டாம் சங்கிலிய மன்னனின் 406 ஆவது நினைவு தினம், நேற்றுக் காலை யாழ்ப்பாணம் நல்லூரில் நினைவுகூரப்பட்டது.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி செம்மணிச் சந்தியிலுள்ள சங்கிலி மன்னன் சிலைக்கு, மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது, இரண்டாம் சங்கிலிய மன்னனின் வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய நூலொன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

சிவசேனையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஒய்வு நிலை பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலய ஆதீன கர்த்தா சுந்தரேஸ்வரக் குருக்கள், யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரக அதிகாரி நாகராஜன்,



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ். மாநகர சபை ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் மற்றும் மதத் தலைவர்கள், வர்த்தகர்கள், பொது மக்கள் பங்கேற்று, அஞ்சலி செலுத்தினர். (அ)

# யாழில் நிமோனியாவால் குடும்பப் பெண் மரணம்!

*யாழ்ப்பாணம், மே. 21*

யாழ்ப்பாணத்தில் குடும்பப் பெண் ஒருவர் நிமோனியா காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளார்.

தாவடிப் பகுதியைச் சேர்ந்த சின்னையா ரஜீனா (வயது 54) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணுக்கு உடல் சுகயீனம் ஏற்பட்ட நிலையில் தனியார் வைத்திய சாலையில் சிகிச்சையளிக்கப்பட்டது. இருப்பினும், நோய் குணமடையாத நிலையில் நேற்றுமுன்தினம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவர் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். நிமோனியா காய்ச்சல் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த பெண்ணின் கணவர் கடந்த 2008ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தத்தினால் உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-05)

# மன்னிப்பு கோரும் தமிழரசு உறுப்பினர்

*முல்லைத்தீவு, மே. 21*

உள்ளூராட்சி சபை தேர்தல் பிரசாரத்தின் போது, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற அமைப்புகளை ஒட்டுக் குழுக்கள் என்று பொருள்பட பேசியிருந்த நிலையில், தமிழ் தேசிய அரசியலின் ஒற்றுமையை கருத்திற்கொண்டு பகிரங்கமாக மன்னிப்பு கோருவதாக உள்ளூராட்சிச் சபை தேர்தலில் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முள்ளியவளை கிழக்கு வட்டாரத்தில், இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சின்னராசா லோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு மன்னிப்புக் கோரினார். (அ)

# காட்டு யானை தாக்கி முதியவர் உயிரிழப்பு!



*வவுனியா, மே. 21*

வவுனியா - கன்னாட்டி கணேசபுரம் பகுதியில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் இரவு அவரின் வீட்டிலிருந்து அருகில் உள்ள கடைக்குச் சென்ற போது வீதிக்கரையில் நின்ற காட்டு யானை அவரை தாக்கிதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தில் கன்னாட்டி - கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த 63 வயதான சுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை பறையனாலங்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



| | | | |
|---|---|---|---|
| மே - 21 புதன்கிழமை | | | |
| விசுவாவசு வருடம் - | | வைகாசி 07 | |
| நல்ல நேரம் | : | 09.00 | - 10.30 |
| ராகு காலம் | : | 12.00 | - 01.30 |
| திதி | : | நவமி | |




**மேடம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

**இடபம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். மாற்றம் உண்டாகும்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. சகிப்புத் தன்மை தேவைப்படும்.

**கடகம்**
மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வாகனத்தை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். நன்மை கிட்டும்.

**சிம்மம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். அதிர்ஷ்டமான நாள்.

**கன்னி**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். உத்தியோகத்தில்திருப்தி உண்டாகும் நினைத்தது நிறைவேறும்.

**துலாம்**
எதிர்ப்புகள் அடங்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**விருச்சிகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். மகிழ்ச்சியான நாள்

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். விழிப்புடன் செயல்படவேண்டிய நாள்.

**கும்பம்**
யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். மேலதிகாரியுடன் மோதல்கள் வேண்டாம். நிதானம் தேவைப்படும் நாள்.

**மீனம்**
தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். வாகன வசதிபெருகும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். மதிப்புக் கூடும்.

# தேசிய மட்டத்தில் சாதனை படைத்த மாற்றுத்திறன் நபர்களுக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே 21

சாதனை படைத்த மாற்றுத்திறன் நபர்களுக்கான கௌரவிப்பும் சாதனைக்கு ஊக்குவித்த உத்தியோகத்தர்களுக்கான மெச்சுரை வழங்கல் நிகழ்வும் உதவி மாவட்டச் செயலாளர் உ. தர்சினி தலைமையில் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கூறுகையில், தற்போது மாற்றுத் திறனாளிகளின் இயலுமைத் திறன் மேன்மைப்பட்டு, சமூகத்தில் மற்றவர்களுடன் போட்டி போடும் அளவுக்கு இருக்கிறார்கள். உள்ளூர் உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு வளர்ந்துள்ளதுடன், மாற்றுத்திறன் நபர்களே வேலை வாய்ப்புக்களையும் வழங்கிவருவது பாராட்டப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.



மாற்றுத்திறனாளிகளுக்கு இடையிலான தேசிய விளையாட்டுப் போட்டி அண்மையில் கொழும்பு ஹோமாகம விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் யாழ். மாவட்டத்திலிருந்து 16 போட்டியாளர்கள் பங்குபற்றி 02 தங்கப் பதக்கங்களையும் 03 வெற்றிச் சான்றிதழ்களையும் பெற்று சாதனை படைத்துள்ளது. அந்த வகையில் குண்டெறிதல் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற தர்மலிங்கம் சிறிகாந்தும் தட்டெறிதலில் தங்கப் பதக்கம் வென்ற பாலசந்திரன் கிருசிகாவுக்கும் தலா 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது. தேசிய போட்டியில் வெற்றிகளை பெற்றுக்கொள்ளும் வகையில் வீரர்களை மாவட்ட மட்டத்திலிருந்து தேசிய போட்டி வரை ஊக்குவித்து வழிப்படுத்திய சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மெச்சுரை வழங்கப்படவுள்ளதாகவும் பதில் அரசாங்க அதிபர் தெரிவித்தார். மேலும், சுவாபிமானி மாவட்ட மட்டப் போட்டியில் - சிறந்த பிரதேச சுவசக்தி அமைப்பாக யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரதேச சுய உதவிக்குழுவும், சிறந்த சுவசக்தி அங்கத்தவராக யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த ஆசைப்பிள்ளை மகேந்திரனும், சிறந்த காட்சிப்படுத்தும் படைப்பை மேற்கொண்ட கோப்பாய் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த தம்பிராசா சுரேஷ்குமாரும், வீட்டு மட்டத்தில் வெற்றிகரமாக சமூகமயப்படுத்தப்பட்ட மாற்றுத்திறன் நபராக காரைநகர் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த தம்பிராசா இராதாகிருஷ்ணனும் சிறந்த பிரதேச மட்ட வழிநடத்தல் குழுவாக நல்லூர் பிரதேச செயலக பிரிவின் குழுவும் மாற்றுத்திறன் நபர்களை தொழிலில் ஈடுபடுத்துவதற்கு பங்களிப்புச் செய்த ஊழியர் எண்ணிக்கை 50 இற்கு குறைவான சிறந்த சேவை வழங்குநராக மாற்றுத்திறனாளிகள் புனர்வாழ்வுச்சங்கமும், சிறந்த பிரதேச உத்தியோகத்தராக வேலணை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த திருமதி றெக்சன் சுவர்ணா டலிமாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை பாராட்டத்தக்க விடயம் என பதில் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சாதனையாளர்கள் பதில் அரசாங்க அதிபரால் கௌரவிக்கப்பட்டனர். (எ)

# ஆளுநருடன் வடக்கு கடற்படை தளபதி சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 21

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், வடக்கு கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் எஸ். ஜே. குமார இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது யாழ். மாவட்டத்திலுள்ள தீவகளுக்கான போக்குவரத்து வசதிகள் தொடர்பிலும் போதைப் பொருள் கடத்தல்களைத் தடுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (எ-05)



# வடமராட்சியில் நோய் பரவும் அபாயம் பிரதேச செயலகம் பொறுப்பற்ற செயல்

யாழ்ப்பாணம், மே 21

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் டெங்கு நோய் பரவுவதற்கு காரணமாக இருப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக நுழைவாயிலில் இருக்கும் பாதுகாப்பற்ற குப்பை தொட்டியில் உத்தியோகத்தர்கள் குப்பைகளை வீசி செல்வதால் மாடுகள், நாய்கள் அந்தக் குப்பைத் தொட்டியை அலங்கோலம் செய்து வருகின்றன.



கடந்த இரண்டு நாட்களாக விடுமுறை நாள் என்பதால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பணிக்கு வந்த அரச உத்தியோகத்தர்கள் குறித்த குப்பையை கண்டும் காணாமலும் விட்டுச் சென்றுள்ளனர்.

பிரதேச செயலகம் அமைந்திருக்கின்ற பகுதியில் மருத்துவமனை, உணவகம், பொலிஸ் நிலையம், சமுர்த்தி அலுவலம், வங்கி, பிரதேச சபை போன்றன காணப்படுவதால் அதிகளவான மக்கள் குறித்த இடத்துக்கு அடிக்கடி வந்து போகிறார்கள்.

குறித்த குப்பையிலிருந்து துர்நாற்றம் வீசி வருவதால் நாய்கள் குப்பையை கிளறி வருகின்றன.

தமது அலுவலகத்துக்கு முன்னால் காணப்படும் குப்பையை சுத்தம் செய்ய முடியாத அரச உத்தியோகத்தர்கள் எவ்வாறு சமூக அக்கறையுடன் சேவை செய்வார்கள் என்று அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (எ-05)

# துப்பாக்கிப் பிரயோகங்களை தடுப்பதற்கு அரசு தவறிவிட்டது!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 21

**நாடு முழுவதும் இடம்பெறும் துப்பாக்கிப் பிரயோக சம்ப வங்களை தடுக்க அரசாங்கம் தவறியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நிலை யியற் கட்டளைச் சட்டம் 27-02 இன் கீழ் நேற்று கேள்வி எழுப் பும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-ஒரு நாட்டின் குடிமக்க ளின் வாழும் உரிமையை உறுதி செய்வது அரசாங்கமொன்றி னது அடிப்படைப் பணியாகும்.

இங்கு நாட்டில் சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வது அர சாங்கத்தின் முதன்மைப் பொறுப்பாகவும் காணப்படு கிறது.

இருப்பினும், நாடு முழுவ தும் தற்போது நடைபெற்று வரும் துப்பாக்கிச் சூடுச் சம்ப வங்கள், கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்களைத் தடுக்க தற்போதைய அரசாங்கம் தவறிவிட்டது.

நாட்டில் கடந்த 8 மாதங் களில் 79 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும், 52 இறப்புகளும் பதிவாகியுள்ளன.



இவ்வாறான சூழலில், இது தொடர்பாக அரசாங்கம் எடுத் துள்ள நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் தெரிவிப் பது அரசாங்கத்தின் பொறுப் பாகும்.

இந்த விடயம் தொடர்பாக நானும், ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபையில் கேள்விகளை எழுப்பியிருந்தா லும், இதுவரை போதுமான தீர்வுகள் எதுவும் கிடைக்க வில்லை-என்றார். (அ)

# குற்றவியல் வழக்குக் கோவையில் சட்டத்தை திருத்தம் செய்ய அனுமதி

கொழும்பு, மே. 21

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் வழக்குக் கோவை சட்டத்தைத் திருத்தம் செய்தல் (மரண விசாரணை) குற்றவியல் வழக்குக் கோவைசட் டத்தின் கீழ் மரணவிசாரணை பற்றிய சட்டபூர்வமான பணிச் சட்டகம் மற்றும் நடவடிக்கை முறைகளைகளையும் நடைமு றைகளையும் மேம்படுத்து வதற்கு இயலுமாகும் வகையில் சட்டமூலமொன்றைத் தயாரிப் பதற்கு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக 2022.10.25 அன்று இடம் பெற்றஅமைச்சரவைக் கூட்டத் தில் அங்கீகாரம் வழங்கப்பட்



டுள்ளது.

குறித்த சட்டமூலத்தை தயா ரிக்கும் நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்வதற்காகப் புதிய அமைச்சரவையின் கொள்கை ரீதியான அங்கீகாரத்தைப் பெற் றுக்கொள்வதற்காக நீதித்துறை மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோச னைக்கு அமைச்சரவை அங்கீகா ரம் வழங்கியுள்ளது. (அ)

# போரில் அங்கவீனமடைந்த படையினருக்கு வாகனங்கள்

கொழும்பு, மே. 21

ரணவிரு சேவை அதிகார சபையின் வேண்டுகோளின் பேரில், யுத்தத்தினால் காயம டைந்த வீரர்களின் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வுக்காக இயங்கி வரும் பராமரிப்பு நிலையங்களுக்கு தேவையான 5 வாகனங்களை கையளிக்கும் நிகழ்வு நேற் சிறப்பகல் ஜனாதிபதி அலுவலகத்துக் குரிய வாகனத் தளத்தில் இடம் பெற்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவின் அறிவுறுத்தலின் பேரில், இந்த வாகனங்கள் வழங்கப்பட்டதுடன், அது தொடர்பான ஆவணங்களை, ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க ரணவிரு சேவை அதிகார சபையிடம் கையளித்தார்.

இலங்கை இராணுவத் தலை மையகத்தின் ரணவிரு சேவை அதிகார சபையின் சார்பாக, மேஜர் எரங்க ரத்நாயக்க, ஆவ ணங்களைப் பெற்றுக்கொண் டார்.

இந்த வாகனங்கள், அனுரா தபுரம், கம்புறுப்பிட்டிய மற்றும் பாங்கொல்ல ஆகிய இடங்களில் உள்ள நிலையங் களிலும்,

அத்திடிய மிஹிந்து செத்மெ துர மற்றும் ராகம ரணவிரு செவன ஆகிய பராமரிப்பு நிலையங்களில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் படை வீரர்களின் நலனுக்காக இவை பயன்படுத்தப்படவுள்ளன.

இரண்டு மிட்சுபிஷி மொன் டெரோ ஜீப் வண்டிகள்,ஒரு நிசான் பெற்றோல் ஜீப் வண்டி, ஒரு டொயோட்டா கரினா கார் மற்றும் ஒரு டொயோட்டா ஹைலக்ஸ் வாகனம் என்பன, பராமரிப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட் டன. (அ)

# பாதாள உலக குழுக்களுடன் அரசியல்வாதிகள் தொடர்பு!

## அரசாங்கம் சபையில் அறிவிப்பு

கொழும்பு, மே. 21

நாட்டில் இயங்கும் பாதாள குழுக்களுடன் அரசியல் தொடர்பு உள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித் துள்ளார்.

பாராளுமன்றத்தில் நிலை யியற் கட்டளைச் சட்டத்தின் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையி லேயே அவர் இதனைக் குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-பாதாள குழுக்களுக்கி டையே இடம்பெறும் மோதல் கள் சமூகத்தில் பேசப்படும் பிரச்னையாக மாறியுள்ளது. பாதாள குழுக்களுடன் அரசி யல் தலையீடு இருப்பதாக புல னாய்வு அறிக்கைகளின் ஊடாக தெரியவந்துள்ளது. இது தொடர்பில் பொலிஸ் விசார ணையின் பின்னர் அவ்வாறான அரசியல்வாதிகள் யார் என் பதை சபைக்கு அறிவிக்க விரும் புகிறேன்.

முப்படையிலிருந்து தப்பிச் சென்றவர்கள் துப்பாக்கிப் பிர யோகங்களுக்காக பயன்படுத் தப்படுகிறார்கள். அதனால் அவ்வாறானவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள் ளோம். இதுவரை மூவாயிரத் துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோல் கடந்த காலங் களில் இராணுவ முகாம்களிலி ருந்து பாதாளக் குழுவினருக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அது தொடர்பிலும் விசா ரணைகள் முன்னெடுக்கப்படு கின்றன.எமது அரசாங்கம் ஆட் சிக்கு வந்த பின்னர் ஆயிரத்து 278 ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டுள்ளன.

மேலும், குற்றச்செயல்கள் இடம்பெறும் 52 பொலிஸ் நிலையங்களை நாம் அடையா ளம் கண்டுள்ளோம். அந்த இடங்களுக்கு 15 விசேட அதி ரடைப்படை குழுவினர் நிய மிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளிலிருந்து திட்டமிட்ட குற்றச் செயல்க ளில் ஈடுபடுவோர் தொடர்பில் தகவல்களை திரட்டியுள்ளோம். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குற்றவாளிகள் வரும் பட்சத்தில் சுயமாக அடையாளம் காணும் கமெ ராக்கள் மூலம் அவர்கள் கண் காணிக்கப்பட்டு கைதுசெய்யப் படுவார்கள்-என்றார். (அ)

# உப்பு இறக்குமதி வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, மே. 21

உப்பு இறக்குமதிக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளி யிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி வரை உப்பு இறக்குமதி செய்வ தற்கான அனுமதியை வழங்கும் வகையில் இந்த வர்த்தமானி அறி வித்தல் வெளியிடப்பட்டுள்ள தாக இறக்குமதி கட்டுப்பாட்டா ளர் நாயகம் உபுல்மலீ பிரேமதி லக்க தெரிவித்தார்.

உப்பு இறக்குமதிக்கான அனு மதிப்பத்திரம் தேவையில்லை யென தெரிவிக்கப்பட்டுள்ளது. உப்பு இறக்குமதி செய்வதற்கு முடியும் என உபுல்மலீ பிரேம திலக்க கூறினார். (அ)

# தேசபந்துவின் சட்டக் குழுவினர் முன்வைத்துள்ள ஆட்சேபனைகளை நிராகரித்த விசாரணைக் குழு!

கொழும்பு, மே. 21

முன்னாள் பொலிஸ்மா அதி பர் தேசபந்து தென்னக்கோ னின் சட்டக் குழு முன்வைத்த ஆரம்ப ஆட்சேபனைகளை விசாரணைக் குழு நிராகரித்துள் ளதாக, பாராளுமன்ற செயல கம் தெரிவித்துள்ளது.

மேலும், 23 குற்றச்சாட்டு கள் அடங்கிய குற்றப்பத்திரி கையை விசாரணைக் குழு வழங்கியுள்ளது.

அதற்கமைய, மேலதிக விசாரணைக்காக, எதிர்வரும் 28 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் கூடுவதற்குக் குழு தீர்மானித்துள்ளதாக பாராளு மன்ற தொடர்பாடல் திணைக்க ளம் தெரிவித்துள்ளது.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக் கோன், அவரது பதவி துஷ்பிர யோகம் தொடர்பான குற்றச் சாட்டுகளை விசாரித்து அறிக்கை அளிப்பதற்கு நியமிக் கப்பட்ட, விசாரணைக் குழு வில் நேற்று முன் தினம் பிற்ப கல் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆசிரியர்களைப் பாடசாலைகளுக்கு இணைக்கும் விடயத்தில் புதிய முறை

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, மே. 21

பாடசாலைகளுக்கு ஆசிரி யர் பயிலுனர்களை இணைத் துக்கொள்ளும் விடயத்தில் புதிய பொறிமுறையை நடை முறைப்படுத்த எதிர்பார்த்துள்ள தாக பிரதமர் ஹரிணி அமரசு ரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நிலையி யற் கட்டளைச் சட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையி லேயே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-ஆசிரியர் பயிலுநர்களை பணிக்கு அமர்த்தும்போது எழுந்துள்ள சிக்கல் நிலைமையை நாம் அறிவோம். இதுவரை காலமும் இருந்த நடைமுறை யின் அடிப்படையிலேயே நிய மனங்கள் வழங்கப்படுகின்றன.

அவர்களது சொந்த மாவட் டத்தில் வெற்றிடங்கள் காணப் படாத பட்சத்தில் வேறு மாவட்டங்களில் உள்ள பாடசா லைகளுக்கு நியமனம் வழங்கப் படுகிறது. அதனை ஏற்றுக் கொள்வதாக அவர்கள் உறுதிய ளித்தே கல்வியியற் கல்லூரிக ளில் இணைகிறார்கள்.



அதனடிப்படையிலேயே இதுவரை காலமும் நியமனம் வழங்கப்பட்டு வருகிறது. தற் போது வழங்கப்பட்டுள்ள நிய மனங்களை பயிலுனர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த விடயத் தில் புதிய பொறிமுறையொன்று நடைமுறைப்படுத்த எதிர்பார்த் துள்ளோம்-என்றார். (அ)

# கால நிலை மீட்சித்திறன் திட்டத்தை அமுல்படுத்த அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மே. 21

கால நிலை மீட்சித்திறன் பல கட்டமான நிகழ்ச்சித் திட்ட அணுகல் திட்டத்தின் கீழ் வளி மண்டலவியல் திணைக்களத்தின் தலைமை யகம் மற்றும் பிராந்தியநிலை யங்களின் உட் கட்டமைப்பு வசதிகளை மேம் படுத்துவதற் காக ஆலோசனைக் கம்பனி யின் சேவையைப் பெறு வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த திட்டம் 2030 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்தப்ப டும் 09 ஆண்டுகால தொடக்க முயற்சியாவதுடன்,அதன் முத லாவதுகட்டத்தை (2021-2026) அமுல்படுத்துவதற்காக மறுசீர மைப்பு, அபிவிருத்திக் கான சர் வதேச வங்கி மற்றும் உலகவங்கி ஆகியவற்றிலிருந்து 92 மில்லியன் அமெரிக்க டொலர் பெறப்பட் டுள்ளது.

உயர் தாக்கத்தை ஏற்படுத் தும் வானிலை,வெள்ளம் மற் றும் மண் சரிவு போன்றவற்றை எதிர்வுகூறுதல் மற்றும் முன் னெச்சரிக்கை கட்டமைப்பை மேம்படுத்தவதன் மூலம் வளி மண்டலவியல் திணைக்கள தலைமையகம் மற்றும் பிராந் திய நிலையங்களின் உட்கட் டமைப்பு வசதிகளை மேம்ப டுத்துதல் திட்டத்தின் முதலா வது கட்டத்தின் கூறொன்று இனங் காணப்பட்டுள்ளது. (அ)

# தற்போதைய அரசாவது நீதியை நிலைநாட்டுமா?

## சர்வதேச மன்னிப்புச் சபை கேள்வி

கொழும்பு, மே. 21

**இலங்கையின் கடந்தகால அரசாங்கங்கள் போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லை என மறுத்து வந்திருப்பதுடன், அவை தொடர்பில் நம்பத் தகுந்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் தவறியிருக்கின்றன. இந்நிலையில் தற்போதைய அரசாங்கமேனும் கடந்தகால அரசாங்கங்களின் தோல்விகளைச் சீர்செய்து, நீதியையும் பொறுப்புக் கூறலையும் நிலைநாட்டுமா என சர்வதேச மன்னிப்புச்சபை கேள்வி எழுப்பியுள்ளது.**

இலங்கையில் இடம்பெற்ற மூன்று தசாப்தகால யுத்தம் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டு ஞாயிற்றுக்கிழமையுடன் 16 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், இது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபையின் உத்தியோகபூர்வ "எக்ஸ்" தளத்தில் செய்யப்பட்டிருக்கும் பதிவில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது-

உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 16 வருடங்கள் பூர்த்தியாகும் மே 18இல் முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் ஒன்றுகூடினர்.

வலிந்து காணாமல் ஆக்கப்படல் சம்பவங்கள் உள்ளடங்கலாக யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் பதிவான சர்வதேச சட்டங்களுக்குப் புறம்பான மிக மோசமான மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் இன்னமும் நீதியையும், பொறுப்புக் கூறலையும் கோரி வருகின்றனர்.

இருப்பினும் அத்தகைய குற்றங்கள் எவையும் இடம் பெறவில்லை என இலங்கையின் கடந்தகால அரசாங்கங்கள் மறுத்து வந்திருப்பதுடன், நம்பத் தகுந்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் தவறியிருக்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போதைய புதிய அரசாங்கமேனும் கடந்தகால அரசாங்கங்களின் தோல்விகளைச் சீர்செய்து, நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலைநாட்டுமா? அத்தோடு பாதிக்கப்பட்ட தரப்பினரின் நீதிக்கான கோரிக்கைக்குச் சர்வதேச சமூகமும் ஆதரவளிக்க வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# காதலியை துப்பாக்கியால் சுட்டுவிட்டு தற்கொலை செய்ய முயன்ற காதலன்!

கொழும்பு, மே. 21

முகுனுவதன - புஞ்சி விலட்டாவ பகுதியில் உள்ள ஒரு வீட்டில் ஏற்பட்ட தகராறு அதிகரித்ததை அடுத்து, 30 வயது காதலன் தனது காதலியை ஏயார் ரைபிளால் சுட்டுவிட்டு, அவர் இறந்துவிட்டதாக நினைத்து தூக்கிட்டு தற்கொலை செய்து கொள்ள முயன்ற சம்பவம் பதிவாகியுள்ளது.

இருப்பினும், பொலிஸாரும் உள்ளூர்வாசிகளும் இருவரின் உயிரையும் காப்பாற்ற முடிந்தது.

இந்த சம்பவத்தில் 30 வயது இளைஞன் ஒருவரும் மாத்தறை பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய பெண்ணும் காயமடைந்தனர். தனது தந்தையுடன் தனியாக வசிக்கும் இந்த இளைஞன், சில நாட்களுக்கு முன்பு தான் திருமணம் செய்து கொள்ளப் போகும் இளம் பெண்ணை வீட்டுக்கு அழைத்து வந்திருந்தான். சம்பவம் நடந்த நேரத்தில் அந்த ஜோடி மட்டுமே இருந்ததாகவும் கூறப்படுகிறது.

16 ஆம் திகதி மாலை இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தின் விளைவாக துப்பாக்கிச் சூடு நடந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். முகத்தில் சுடப்பட்ட பின்னர் வீட்டை விட்டு வெளியே ஓடிய இளம் பெண், பிரதான வீதியின் அருகே ஒரு கடைக்கு அருகில் விழுந்துள்ளார்.

உடனடியாக செயற்பட்ட அயலவர்கள் 1990 அவசர நோயாளர் காவு வண்டியில் சிலாபம் பொது மருத்துவமனைக்கு அனுப்பினர். பின்னர், அந்த இளைஞனை தேடி அயலவர்கள் வந்தபோது, வீட்டின் கதவுகள் மூடப்பட்டிருந்த அறையில் கயிற்றில் தூக்கில் தொங்கிய நிலையில் அவர் கண்டுபிடிக்கப்பட்டார். பொலிஸாரும் உள்ளூர்வாசிகளும் கயிற்றை அறுத்து அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

30 வயதுடைய காதலன் சிலாபம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிலாபம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

(அ)

# பாடசாலையில் 9 மாணவர்களை கொடூரமாகத் தாக்கினார் அதிபர்!

கல்முனை, மே 21

அம்பாறையில் உள்ள பாடசாலை ஒன்றில் 9 மாணவர்களை முழங்காலில் நிற்க வைத்து தாக்கிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

தரம் - 05 இல் கல்வி கற்கும் மாணவர்களை பாடசாலை அதிபரான பௌத்த துறவி கொடூரமாகத் தாக்கியதாக பெற்றோர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி பாடசாலை நேரத்துக்குப் பின்னர் பிரத்தியேக வகுப்புகள் நடைபெற்றன. அன்றைய தினம் இடைவேளையின் போது மலசலகூடம் சென்ற பல மாணவர்கள் தண்ணீர் விசிறி விளையாட்டில் ஈடுபட்டதாக வகுப்பு ஆசிரியர் பாடசாலை அதிபருக்கு தெரிவித்திருந்தார்.

இதன்படி, மறுநாள் 16 ஆம் திகதி பிற்பகல் 03.00 மணியளவில், பாடசாலை அதிபர் மூன்று பிரம்புகளை எடுத்து, ஒன்பது மாணவர்களையும் வரவழைத்து முழங்காலில் நிற்க வைத்து, அவர்களின் கைகளைச் சுவரில் வைக்கச் செய்து, மாணவர்களின் முதுகில் கொடூரமாகத் தாக்கியுள்ளார்.

வீடு திரும்பிய பாதிக்கப்பட்ட மாணவர்கள் இச்சம்பவத்தை பெற்றோரிடம் தெரிவித்தனர். பெற்றோர்கள் மாணவர்களைப் பரிசோதித்தபோது, தாக்குதலால் ஏற்பட்ட வீக்கமும் வலியுடன் கூடிய காயங்களும் இருப்பது கண்டறியப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் பெற்றோர்கள் கல்வி அலுவலகத்தில் முறைப்பாடு செய்யத் தயாராக இருந்தபோது, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த பெற்றோர் குழு, தாக்குதலால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோரை சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டாம் என அழுத்தம் கொடுத்தது.

எனினும், நேற்று சிறுவர் மறுவாழ்வு மையம், அம்பாறை வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரிடம் இம்மாணவர்கள் மீதான தாக்குதல் குறித்து எழுத்துமூல முறைப்பா டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, அம்பாறை வலயக் கல்விப் பணிப்பாளர் இத்தாக்குதல் குறித்து கல்வி அலுவலகம் உடனடியாக விசாரணையைத் தொடங்கும் எனத் தெரிவித்தார்.

(எ)

# மட்டக்களப்பில் வீதி அதிகார சபை தற்காலிக ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்




மட்டக்களப்பு, மே 21

மட்டக்களப்பு வீதி அதிகார சபையில் தற்காலிகமாகப் பணியாற்றிவரும் ஊழியர்களை நிரந்தரமாக்கக் கோரி, ஐக்கிய பொதுச் சேவையாளர் சங்கம் நேற்று பொலிஸ் நிலைய வீதிச் சுற்றுவட்டத்திலிருந்து காந்தி பூங்கா வரை ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஈடுபட்டது.

வீதி அதிகார சபையில் தற்காலிகமாக இணைக்கப்பட்ட 141 ஊழியர்கள் கடந்த 9 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றி வந்த போதிலும் அவர்கள் இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை. எனவே, அவர்களை நிரந்தரமாக்கக் கோரி, ஐக்கிய பொதுச் சேவையாளர் சங்கத்தின் மட்டக்களப்பு தலைவர் சுரேஸ் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்படி, நகரிலுள்ள பொலிஸ் நிலைய வீதிச் சுற்றுவட்டத்துக்கு அருகில் நண்பகல் 12.00 மணியளவில் ஒன்று கூடிய தற்காலிக ஊழியர்கள், அனைத்து தற்காலிக ஊழியர்களையும் நிரந்தரமாக்கு, 14 நாட்கள் மருத்துவ விடுப்பு வழங்கு, ஏனைய ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை எங்களுக்கும் வழங்கு, ஜனாதிபதியே எங்களை நிரந்தரமாக்குங்கள் போன்ற கோஷங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(எ)

# நாட்டில் இன அழிப்பு இடம்பெறவேயில்லை

## கூறுகிறார் அமைச்சர் விஜித ஹேரத்




கொழும்பு, மே. 21

நாட்டில் இனவழிப்பு இடம் பெறவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

நேர்காணல் நிகழ்ச்சியொன்றில் பங்கேற்ற போது அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

தமிழ் மக்களை இலங்கை இராணுவம் அழித்திருந்தால் அதனையே இன வழிப்பு என குறிப்பிடலாம் என அவர் கூறினார்.

எனினும் அவ்வாறு இடம் பெறவில்லை எனவும் அவ்வாறான சம்பவமொன்று எப்போதும் இடம்பெறவில்லை என அவர் குறிப்பிட்டார்.

போரின்போது சிவிலியன்களை பாதுகாத்துக் கொண்டே முன்நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டது என அவர் தெரிவித்தார். இறுதிக் கட்டப் போரின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்தியபோதிலும் படையினர் அவர்களை மீட்டிருந்தனர் என அவர் கூறினார்.

இலங்கையில் இனவழிப்பு மேற்கொள்ளப்பட்டதாக எந்தவொரு நாட்டிலும் சாட்சியங்களுடன் நிரூபிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டார். கனடா அல்ல உலகில் எந்தவொரு நாடும் இலங்கையில் இனவழிப்பு இடம்பெற்றதாக கூறினால் அதனை எதிர்ப்பதாகவும் அதனை நிராகரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயர், அவர்களது சின்னங்கள் போன்றவற்றை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நினைவுகூரல் நிகழ்வுகளில் பங்கேற்பவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறினார்.

போரில் உயிர் நீத்த உறவுகளை நினைவு கூர்வதற்கு எவ்வித தடையும் கிடையாது என்றபோதிலும் பயங்கரவாத இயக்கமொன்றை பிரசாரம் செய்யும் வகையிலான நிகழ்வுகளை அனுமதிக்க முடியாது என அவர் தெரிவித்தார்.(அ)

# வாகன விபத்துக்களை தடுக்க விசேட திட்டம் நடைமுறைக்கு!

கொழும்பு, மே. 21

நாளுக்குநாள் அதிகரித்துவரும் வாகனவிபத்துக்களை தடுத்து,வீதிகள் அனைவருக்கும் பாதுகாப்பான இடங்களாக மாற்றுவதற்காக பாடசாலை மாணவர் களை அடிப்படையாககொண்ட "ரேக்கெயர் வீதிகளைப்பாதுகாப்போம்"எனும் தலைப்பிலானதெளிவுபடுத்தல் திட்டத்தைபாட சாலைமட்டத்தில் அமுல்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பாடசாலைவாகன ஒழுங்குபடுத்தல் அணிகள் மற்றும் மாணவதலைவர்களை இணைத்து, 100 கல்விவலயங்களில் உத்தேச திட்டம் அமுல்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு கல்வி வலயத்திலிருந்துதலா 500 மாணவர்கள் என்ற ரீதியில் 50,000 மாணவர்களை நேரடியாக நிகழ்ச்சித் திட்டத்தில் இணைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

# யுத்தம் நிறைவடைந்து 16 ஆண்டுகள் இராணுவத்தில் முன்னேற்றம் இல்லை!

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா விசனம்



கொழும்பு, மே. 21

**இலங்கையில் நிலவிய யுத்தக்கால சூழ்நிலைக்குப் பின்னர், நாட்டு இராணுவத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட்டதாக தெரியவில்லை என முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

தேசிய இராணுவ நினைவு தினத்தை முன்னிட்டு, அத நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, யுத்தக்காலத்தில் இருந்த யுத்த தாங்கிகள் பல தற்போது சேதமடைந்துள்ளதாகக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-யுத்தம் நிறைவடைந்த பின்னர் 16 ஆண்டுகள் கடந்துள்ள போதும் இராணுவத்தின் நிலையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட்டதாக என் மனச்சாட்சிக்கு ஒப்புக்கொள்ள முடியாது. ஒரு உதாரணம் சொல்கிறேன்: நான் யுத்தம் நடத்திய காலத்தில் என்னிடம் 80 யுத்த டாங்கிகள் இருந்தன. யுத்தம் முடிந்த பின்னர் அவை 30 ஆகக் குறைந்தன, 50 டாங்கிகள் அழிந்துள்ளன. இப்போது இராணுவத்திடம் 30 யுத்த டாங்கிகள் மட்டுமே உள்ளன. படைப்பிரிவுகளுக்கு யுத்த டாங்கிகள் தேவை. வீரர்கள் மட்டும் இருந்தால் போதாது, ஒரு ஆயுதப்படை பிரிவுக்கு ஆயுதங்கள் தேவை.

அழிக்கப்பட்ட 50 யுத்த டாங்கிகளுக்கு பதிலாக 50 புதியவை கொண்டுவரப்பட வேண்டும். ஆனால், அதற்கு எவ்வித ஆர்வமும் எடுக்கப்படவில்லை.

புலனாய்வு தொடர் பான அனைத்தையும் அரசாங் கம் கவனிக்க வேண்டும். நான் ஒரு இலட்சத்து ஆறாயிரம் பேர் கொண்ட இராணுவத் துக்கு வழங்கிய பட்ஜெட்டை வைத்தே, இரண்டு இலட்சம் பேர் கொண்ட இராணுவத்தையும் பராமரித்தேன். இதன் மூலம் செலவுகளைக் குறைக்க முடியும் என்று கூறவில்லை.

இலங்கையின் பொருளாதார நிபுணர்கள் சிலர் இராணுவம் மிகப் பெரியது, செலவுகளைக் குறைக்க வேண்டும் எனக் கூறுவதை நான் கேள்விப்படுகிறேன்.

ஆனால், அத்தகைய மன நிலையுடன் இராணுவத்தையும் பாதுகாப்பையும் பார்க்க முடியாது. இவை உலகின் மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் தொழில்நுட்ப ரீதியாகவும், பயிற்சி அடிப்படையிலும் முன்னேற்றப்பட வேண்டும்-என்றார். (அ)

# இந்த ஆண்டு இதுவரை 46 துப்பாக்கிச் சூடுகள்!

கொழும்பு, மே. 21

**2025ஆம் ஆண்டின் இது வரை 46 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.**

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

குறித்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 31 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களின் தூண்டுதலால் இடம்பெற்றவை எனவும் அவர் கூறினார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களின் தூண்டுதலால் நடந்த 31 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் 100 இற்கும் மேற்பட்ட சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கு பயன்படுத்தப்பட்ட 41 துப்பாக்கிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 27 பிஸ்டல் வகை துப்பாக்கிகள் எனவும், ஏனையவை 14 எம்.எம், ரி-56 ரக துப்பாக்கிகள் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# பொலிஸ் காவலில் இருந்த 49 பேர் ஐந்து வருடங்களுக்குள் உயிரிழப்பு!

கொழும்பு, மே. 21

கடந்த 2020ம் ஆண்டு தொடக்கம் 2025 வரையான காலப்பகுதிக்குள் பொலிஸ் தடுப்புக் காவலில் இருந்த 49 பேர் மரணித்துள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் இந்த விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பொலிஸ் தடுப்புக்காவலில் இருக்கும் சந்தர்ப்பத்தில் பொலிசாருடன் அநாவசிய மோதல்களை ஏற்படுத்திக் கொள்ளாமல் தவிர்த்துக் கொள்வது குறித்து பொதுமக்களைத் தெளிவூட்டும் வகையில் குறித்த நிகழ்வை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்பாடு செய்திருந்தது.

அதன்போது வெளியிடப்பட்ட தகவல்களின் பிரகாரம் கடந்த ஐந்து வருடங்களுக்குள் பொலிஸ் தடுப்புக் காவலில் 49மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

அதே போன்று பொலிஸாருடனான மோதல்கள் காரணமாக மேலும் 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

இனிவரும் காலங்களில் இவ்வாறான மரணங்கள் ஏற்படுவதைத் தடுக்க தேவையான வழிகாட்டல்களை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (அ)

# கிலோ கணக்கில் உப்பை கொள்வனவு செய்யாதீர்!

## அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி



கொழும்பு, மே. 21

கிலோ கணக்கில் உப்பு கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்க முடியாது என அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உப்பளங்கள் அமைப்பெற்றுள்ள அநேக மான இடங்களில் பெய்த கடும் மழையினால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது என அவர் கூறினார்.

எதிர்பார்க்கப்பட்ட அளவில் உப்பு உற்பத்தி செய்ய முடியாத காரணத்தால் நாட்டில் உப்புக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

காலநிலையை கட்டுப்படுத்துவதற்கு அரசியல்வாதிகளுக்கோ அல்லது அதிகாரிகளுக்கோ முடியாது என அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் உப்பினை இறக்குமதி செய்ய நேரிட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

எனினும், ஒரு கிலோ கிராம் கொள்வனவு செய்யும் மக்கள் பத்து, பதினைந்து கிலோ கிராம் எடையுடைய உப்பைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி வைத்துக்கொள்ள அனுமதிக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டினார்.

உப்பு விநியோகத்தை கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ள வேண்டுமென அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி குறிப்பிட்டார்.

### விபத்துகளில் இதுவரை 1,007 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, மே. 21

2025 ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதிகளில் இடம்பெற்ற 944 விபத்துகளில் 1,007 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

விபத்துகளைக் கட்டுப்படுத்துவதற்காக மதுபோதையில் வாகனம் ஓட்டுவோரைக் கைது செய்வது, கவனக்குறைவாக வாகனம் ஓட்டுவோரைக் கண்டறிவதற்கான நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொள்வதாக அவர் கூறினார்.

அதன்படி, ஜனவரி 1 முதல் மே 18 வரையிலான காலப்பகுதியில் மதுபோதையில் வாகனம் ஓட்டிய 26,413 பேர் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

கொழும்பு மாநகர சபை

# தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்க சுயேச்சைக் குழுக்கள் தீர்மானம்!

கொழும்பு, மே. 21

கொழும்பு மாநகர சபையில் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு, தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்க பல்வேறு சுயேச் சைக் குழுக்கள் தீர்மானித்துள்ளன.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுக்கும், கொழும்பு மாநகர சபைக்கு போட்டியிட்ட சுயேச்சைக் குழுக்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

பெலவத்தையில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, அரசாங்கத்துக்கு பெரும்பான்மை இல்லாத உள்ளூராட்சி மன்றங்களில் ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் பொது இணக்கப்பாட்டை எட்டியுள்ளன. (அ)

# எதிர்க்கட்சிகள் இணைந்து அமைக்கும் கூட்டணி ஜனநாயகத்துக்கு முரணானது

## சம்பிக்க ரணவக்க கூறுகிறார்

கொழும்பு, மே. 21

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பதற்கு எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து புதிதாக ஸ்தாபிக்கப்படும் புதிய அரசியல் கூட்டணி முற்றிலும் தவறானது ஜனநாயகத்துக்கு முரணானது எனவும் இந்த செயற்பாட்டில் தாங்கள் பங்காளியாக போவதில்லை எனவும் ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய குடியரசு முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்திக்கு பெரும்பான்மை பலம் கிடைக்கப் பெற்றுள்ளது. மக்களாணைக்கு அமைய அந்த கட்சி உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளில் ஆட்சியமைக்க இடமளிக்க வேண்டும்.

அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு தேசிய மக்கள் சக்தியை நெருக்கடிக்குள்ளாக்கும் செயற்பாடுகளுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை.

பாராளுமன்றத்தின் அதிகாரத்தை மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வழங்கியுள்ளார்கள்.

அதுபோலவே தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்றுள்ள 265 உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைக்க இடமளிக்க வேண்டும்.எதிர்க்கட்சிகளின் புதிய அரசியல் கூட்டணியில் நாங்கள் பங்காளியாக போவதில்லை.

ஏனெனில் அது தவறு ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு முரணானது.ஜனநாயக ரீதியில் மக்கள் ஆணை வழங்கியுள்ள தரப்பினர் ஆட்சியமைக்க இடமளிக்கவேண்டும்.பலவந்தமான முறையில் மாற்று கருத்துக்களுக்கான கிடைத்த வாக்குகளை ஒன்றிணைத்து எதிர்க்கட்சி கூட்டணியமைப்பது சாத்திய மற்றது. தொடர்ச்சியாக எதிர் கொள்ளும் பின்னடைவை மீளாய்வு செய்யவேண்டும்-என்றார். (அ)

# பல பகுதிகளில் மழை

கொழும்பு, மே. 21

தென்மேற்கு பருவப் பெயர்ச்சி படிப்படியாக நாடு முழுவதும் நிலைபெற்று வருவதனால் நாட்டின் பல பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, வடமேல், மத்திய மற்றும் தென் மாகாணங்களில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யக்கூடும். கிழக்கு மாகாணத்தில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

வடமேல், வடமத்திய, வடக்கு, மத்திய மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (அ)

# கடற் கொள்ளையர்களிடமிருந்து மீனவர்களை பாதுகாக்க திட்டம்



**கல்முனை, மே 21**
**கடற் கொள்ளையர்களிடமிருந்து மீனவர்களின் உடைமைகளையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது பல்வேறு திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.**

அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் ஒருங்கிணைப்பு தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம் பாவாவின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பாவா ரோயலி வரவேற்பு மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே. முரளிதரன், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவி பொலீஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், விசேட அதிரடிப்படையினர், படைகளின் உயர் அதிகாரிகள், மீன்பிடித்திணைக்கள உயர் அதிகாரிகள், அனர்த்த முகாமைத்துவ நிலைய உயர் அதிகாரிகள், காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை பிரதேச செயலாளர்கள், கல்முனை மாநகர சபை ஆணையாளர் உட்பட மீனவச் சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

(எ)

# நான்கு கஜ முத்துக்களுடன் திருமலையில் நால்வர் கைது

திருகோணமலை, மே 21
திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டைட் வீதியில் வைத்து நான்கு கஜ முத்துக்களுடன் நால்வரை திருகோணமலை துறைமுக பொலிஸார் நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளனர்.

இதன்போது நான்கு கஜ முத்துக்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஒரு பெண் மூன்று ஆண்கள் உட்பட நான்கு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கட்டுக்கஸ்தோட்டையை சேர்ந்தவர்கள் எனவும் இவர்கள் யானைத் தந்தங்களை விற்பனை செய்வதற்குத் தயாராக இருந்த போது துறைமுக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் கஜ முத்துக்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை திருகோணமலை துறைமுக பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(எ)





# அஷ்ரப்பின் ஒலுவில் இல்லம் பல்கலையிடம் கையளிப்பு

ஒலுவில், மே 21
சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் எம். எச். எம் அஷ்ரப்பின் ஒலுவில் இல்லம் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க அவரது குடும்பத்தினரால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக பல்கலைக்கழகத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் யூ.எல். அப்துல் மஜீத், அஷ்ரப்பின் மகன் அமான் அஷ்ரப், பல்கலைக் கழக பேராசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ-01)

# "ஆசிரியர்களிடமிருந்து உச்ச பயனை அதிபர்கள் பெறவேண்டியது அவசியம்"



கல்முனை, மே 21
மாணவர்களின் கல்வி, நிர்வாகம், ஒழுக்கம் என்பனவற்றிலும் ஆசிரியர்களிடமிருந்து பாடசாலை உச்ச பயனை பெறுவதிலும் அதிபர்களின் வகிபாகம் மிக முக்கியமானது என கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கே. குணநாதன் தெரிவித்தார்.

மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சரியான வழிகாட்டல்களை அதிபர்கள் செய்ய வேண்டியது மிக அவசியம் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சஹுதூல் நஜீம் தலைமையில் கல்முனை வலய அதிபர்களுடான சந்திப்பு கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாணவர்களுக்கு கிடைக்கும் உதவிகளை உரிய நேரத்தில் பெற்றுக் கொடுக்க வேண்டும். அரசாங்கம் வழங்கும் நிதி உதவியை மாணவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதில் அதிபர்கள் பின் நிற்கக் கூடாது- என்றார். அண்மையில் வெளியான உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் படி மாவட்ட மட்டத்தில் முதலாமிடம் பெற்று மருத்துவத்துறைக்குத் தெரிவான மாணவிக்கும் பொறியியல் துறையில் முதலாமிடம் பெற்ற மாணவனுக்கும் கல்விச் செயலாளரல் நினைச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டது.

மேலும் பௌதீக வளம் குறைந்த மூன்று பாடசாலைகளுக்கு மடிக்கணினி வழங்கப் பட்டதுடன், இருபது மாணவர்களுக்கு அவர்களின் கல்விச் செலவுக்கான காசோலையும் வழங்கப்பட்டது.

(எ-01)

# அதிபரின் வீட்டுக்கு தீ வைக்க முயற்சி!

கல்முனை, மே 21
அம்பாறை, அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அமைந்துள்ள அதிபர் அன்வர் நௌசாத்தின் வீட்டுக்கு நள்ளிரவில் தீ வைப்பதற்கு முயற்சிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்வர் நௌசாத்தின் வீட்டு வளவுக்குள் புகுந்தவர்கள் வீட்டின் முன் பகுதியில் தீ வைப்பதற்காக பல இடங்களில் பெற்றோல் ஊற்றியுள்ளனர். சத்தம் கேட்டு தான் வெளியில் வந்து பார்த்ததாகவும் பெற்றோல் ஊற்றியவர்கள் தப்பித்து ஓடியதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் தப்பித்து ஓடியவர்கள் கற்களை வீசி தாக்கியதாகவும் அதனை அடுத்து பொலிஸ் அவசர இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு நடந்த சம்பவங்கள் பற்றி முறையிட்டுள்ளதாகவும் அதன் பின்னர் பொலிஸார் தனது வீட்டுக்கு வந்து தகவல்களை பெற்றுக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக சில அரசியல்வாதிகள் தன்னைப் பற்றி தொடர்ச்சியாக பொய்யான தகவல்களை பரப்பி வருவதாகவும் நடந்த சம்பவத்துக்கும் அதற்கும் தொடர்புகள் இருக்கலா மெனவும் அன்வர் நௌசாத் கூறினார்.



முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 12அடி உய ரம் கொண்ட கற்சிலை மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கு அருகில் கடந்த 17 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டபோது.....

# தங்கச் சுரங்கம் இடிந்து 19 தொழிலாளர்கள் பலி

## இந்தோனேஷியாவில் துயரச் சம்பவம்



ஜகார்த்தா, மே 21

**இந்தோனேஷியாவில் தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்தில் 19 தொழிலாளர்கள் பலியாகினர்.**

தெற்காசிய நாடுகளில் ஒன்றான இந்தோனேஷியா அதிகளவில் கனிம வளங்கள் கொண்டது. ஆசிய நாடுகளிலேயே தங்க உற்பத்தியில் முன்னணி நாடாக இருந்து வருகிறது. கடந்த 2024ஆம் ஆண்டு இந்தோனேஷியாவிலிருந்து மட்டும் சுமார் 100 தொன் அளவில் உலக நாடுகளுக்கு தங்கம் ஏற்றுமதியானது.

வடக்கு சுலேவேசியில் உள்ள டோகா திண்டுங் சுரங்கம் மிகப் பெரிய தங்கச் சுரங்கங்களில் ஒன்றாகும். மேலும் கிழக்கு ஜாவாவில் உள்ள சும்பெராகுங் தங்கச் சுரங்கம், தும்பாங் தங்கச் சுரங்கம் என அரசு சார்பிலும் தனியார் நிறுவனங்களும் தங்கச் சுரங்கங்களை தோண்டி தங்கத்தை வெட்டி எடுத்து வருகின்றன. இருப்பினும் நாடு முழுவதும் ஆங்காங்கே சட்டவிரோதமாக தங்கச் சுரங்கங்கள் தோண்டப்பட்டு தங்கம் வெட்டி எடுக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இந்த நிலையில் மேற்கு பப்புவா மாகாணம் ஏர்பாக் மலைப் பகுதி அருகே சட்டவிரோதமாக தங்கச் சுரங்கம் தோண்டப்பட்டு தங்கம் வெட்டி எடுக்கப்பட்டு வருகின்றது. இந்தச் சுரங்கத்தில் உள்நாட்டினர் மட்டுமின்றி வெளிநாட்டினரும் ஏராளமானவர்கள் தங்கியிருந்து பணிபுரிந்து வந்தனர்.

நேற்று முன்தினம் வடக்கு பப்புவாவில் கனமழை கொட்டித் தீர்த்தது. தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் தங்கச் சுரங்கத்துக்குள்ளும் வெள்ளம் புகுந்தது. தொழிலாளர்கள் பலர் தங்கம் வெட்டி எடுத்து கொண்டிருந்த சமயத்தில் அந்தச் சுரங்கம் பயங்கர சத்தத்துடன் இடிந்து விழுந்தது.

இதில் இடிபாடுகளில் சிக்கி 19 பேர் உயிரிழந்தனர். இதுகுறித்து தகவலறிந்த தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிருக்குப் போராடிய 20இற்கும் மேற்பட்டோரை மீட்டு வெளியே கொண்டு வந்தனர். உயிரிழந்த 6 பேரின் உடல்கள் மட்டும் மீட்கப்பட்டன. சுரங்கத்தில் தொடர்ந்து மீட்புப் பணி நடைபெற்று வருகிறது. (எ)

# ஹசீனா வேடத்தில் நடித்த பிரபல நடிகை கைதானார்

டாக்கா, மே 21



பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் வாழ்க்கை வரலாற்று படத்தில் நடித்து புகழ்பெற்ற பிரபல நடிகை நுஷ்ரத் பரியா கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஷேக் ஹசீனாவுக்கு எதிராக கடந்தாண்டு ஜூலை மாதத்தில் உள்நாட்டு கலவரம் வெடித்தது. இதில், கொலை முயற்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்காக நுஷ்ரத் பரியா மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்த நிலையில், வெளிநாட்டுக்கு செல்ல டாக்காவின் ஷாஜ கான்லால் சர்வதேச விமான நிலையத்துக்கு வந்த போது ஞாயிற்றுக்கிழமை காலை கைது செய்யப்பட்டார். இதையடுத்து, அவர் உள்ளூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டார்.

ஷேக் முஜிபுர் ரஹ்மான் பற்றிய வாழ்க்கை வரலாற்றுப் படத்தில் ஷேக் ஹசீனாவாக நடித்ததற்காக நுஸ்ரத் பரியா நன்கு அறியப்பட்டவர். (எ)

# பயங்கரவாதிகளின் தாக்குதலில் நைஜீரியாவில் 57 பேர் உயிரிழப்பு

அபுஜா, மே 21

நைஜீரியாவில் பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலில் 57 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு நைஜீரியா. இந்த நாட்டில் போகோ ஹராம் பயங்கரவாத அமைப்புக்கும் படையினருக்கும் இடையே மோதல் தீவிரமடைந்து வருகிறது. போகோ ஹராம் பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்புகள் பொதுமக்கள் மீது கொடூரத் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில், அந்த நாட்டின் பார்னோ மாகாணம் பஹா பகுதியிலுள்ள மல்லாம் கரமதி, வாடன்ஷிதி கிராமங்களுக்குள் புகுந்த போகோ ஹராம் பயங்கரவாதிகள் அங்கிருந்த கிராம மக்களில் 57 பேரை சுட்டுக் கொன்றனர். மேலும், 70 இற்கும் மேற்பட்ட மக்களை பயங்கரவாதிகள் கடத்திச்சென்றனர். அவர்களின் நிலை என்ன? என்பது குறித்து இதுவரை தகவல் வெளியாகவில்லை. (எ)




# கொல்களமாக மாறியது காஸா

காஸா, மே 21

இஸ்ரேலின் நாளாந்த தாக்குதல்களால் காஸா ஒரு கொல்களமாக மாறியுள்ளது என காஸாவின் தென்பகுதியில் பணிபுரியும் பிரிட்டனின் சத்திர சிகிச்சை நிபுணர் ரொம் பொட்டோகர் தெரிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல்கள் காரணமாக 130இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர் என பலஸ்தீன மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்த நிலையில் மருத்துவர் ரொம் பொட்டோகர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது காஸாவின் மற்றுமொரு பேரழிவின் நாள் என அவர் வீடியோ பதிவில் தெரிவித்துள்ளார்.

வடக்கிலிருந்து வரும் தகவல்கள், கதைகள், முற்றிலும் கொடூரமானவையாக உள்ளன. இங்கு என்ன நடக்கின்றது என்பதை வார்த்தைகளில் வர்ணிப்பது கடினம். கம்போடியா கொலைக்களம் என்றால் காஸா கொல்களம் என அவர் கூறியுள்ளார். (எ)

# “குறைபாடு அல்ல குற்றம்”

புதுடில்லி, மே 21

ஒப்ரேஷன் சிந்தூர் இராணுவ நடவடிக்கையின்போது எத்தனை விமானங்களை இந்தியா இழந்தது என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள ராகுல் காந்தி,

ஒப்ரேஷன் சிந்தூர் இராணுவ நடவடிக்கை பற்றி முன்னரே தெரிவித்தது ஏதோ ஒரு சிறு குறைபாடு அல்ல குற்றம். எனவே, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் மௌனம் மோசமானது. நான் மீண்டும் கேட்கிறேன் பாகிஸ்தானுக்குத் தகவல் தெரிந்ததால் எத்தனை விமானங்களை நாம் இழந்தோம்? இது தவறு அல்ல இது ஒரு குற்றம். இந்தியாவுக்கு உண்மை தெரிந்தாக வேண்டும் என ராகுல் எம்.பி. குறிப்பிட்டுள்ளார். (எ)

# ரஷ்யா- உக்ரைன் போர் நிறுத்த பேச்சுக்களில் முன்னேற்றம்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிப்பு

வாஷிங்டன், மே 21

ரஷ்யா - உக்ரைன் போர் நிறுத்த பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

ஒவ்வொரு வாரமும் 5 ஆயிரம் இளைஞர்கள் கொல்லப்படுகின்ற பயங்கர சூழல் உள்ளது எனவும் ட்ரம்ப் கூறியுள்ளார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே 2022ஆம் ஆண்டு பெப்ரவரியில் போர் மூண்டது. உக்ரைனுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் படையெடுத்த ரஷ்யா, உக்ரைனின் கீவ், கார்கிவ், டொனெட்ஸ்க் உள்ளிட்ட பல நகரங்களை முதலில் கைப்பற்றியது. எனினும், உக்ரைன் பதிலடி கொடுத்து அவற்றை மீட்டது. போரானது 3 ஆண்டுகளை கடந்தும் நீடிக்கிறது.

அமெரிக்கா, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் உக்ரைனுக்கு ஆதரவளித்து வருகின்றன. இதற்கேற்ப, அந்த நாடுகள் இராணுவம் மற்றும் நிதி உதவியை வழங்கி வருகின்றன. ரஷ்யாவுக்கு, வடகொரியா இராணுவ தளவாடங்கள் மற்றும் படையினரை அனுப்பி மறைமுக உதவி செய்கிறது என கூறப்படுகிறது.



போரில் இரு தரப்பிலும் இலட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், போரை முடிவுக்கு கொண்டு வரும் மத்தியஸ்த பேச்சுக்களில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இதன்படி, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை நேற்று முன்தினம் சந்தித்து பேசினார்.

புடினுடன் இரண்டரை மணி நேரம் ஆலோசனை மேற்கொண்டதில், முன்னேற்றத்துக்கான விடயங்கள் நடந்துள்ளன என அவர் கூறினார். இதுபற்றி வெள்ளை மாளிகையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் ட்ரம்ப் கூறுகையில், ஒவ்வொரு வாரமும் 5 ஆயிரம் இளைஞர்கள் கொல்லப்படுகின்ற பயங்கர சூழல் உள்ளது. ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் பலருடனும் நாங்கள் பேசியுள்ளோம் என்று கூறியுள்ளார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகள் உடனடியாக போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கான பேச்சுக்களை தொடங்குவார்கள் என ட்ரம்ப் குறிப்பிட்டார். இதற்கேற்ப வத்திக்கான் தலைமையும் பேச்சுக்களை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளது- என்றார்.

இதேவேளை, உக்ரைனுடன் இணைந்து பணியாற்ற தயார் என புடின் கூறினார். அமைதிக்கான சிறந்த வழிகளை உறுதி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். இதனால், உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையேயான மோதல் போக்கு முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# 6 விக்கெட் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணி வெற்றி



லக்னோ, மே 21

6 விக்கெட்கள் வித்தியாசத்தில் லக்னோ அணியை வீழ்த்தி ஹைதராபாத் அணி வெற்றி பெற்றது.

10 அணிகள் இடையிலான 18ஆவது ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டி தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் உத்தர பிரதேச மாநிலம் லக்னோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற 61ஆவது லீக் ஆட்டத்தில் லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் - சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக மிட்செல் மார்ஷ் - மார்க்ரம் ஆகியோர் களமிறங்கினர். இருவரும் சிறப்பாக விளையாடினர். முதல் விக்கெட்டுக்கு 115 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்த நிலையில் இந்த ஜோடி பிரிந்தது. அதிரடியாக விளையாடிய மார்ஷ் 65 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த அணித் தலைவர் ரிஷப் பண்ட் 7 ஓட்டங்களில் வெளியேறினார்.

சிறப்பாக ஆடி வந்த மார்க்ரம் 61 ஓட்டங்களில் ஹர்ஷல் பட்டேல் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஆயூஷ் பதோனி 3 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இறுதிக் கட்டத்தில் நிக்கோலஸ் பூரன் அதிரடியாக விளையாடி லக்னோ வலுவான நிலையை எட்ட உதவினார். அவர் இறுதி ஓவரில் 45 ஓட்டங்கள் பெற்றிருந்த போது ஆட்டமிழந்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் லக்னோ அணி 7 விக்கெட்களை இழந்து 205 ஓட்டங்கள் எடுத்தது. கடைசி பந்தில் ஆகாஷ் தீப் சிக்ஸர் அடித்து அணி 200 ஓட்டங்களை எட்ட உதவினார். ஹைதராபாத் தரப்பில் அதிகபட்சமாக ஈசன் மலிங்க 2 விக்கெட்கள் வீழ்த்தினார். இதனையடுத்து 206 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் ஹைதராபாத் அணி களமிறங்கியது.

அந்த அணியில் தொடக்க வீரராக களமிறங்கிய அதர்வா டெய்ட் 13 ஓட்டங்களில் வெளியேறினார். மற்றொரு தொடக்க வீரர் அபிஷேக் ஷர்மா எதிரணியின் பந்து வீச்சை வெளுத்து கட்டினார். 18 பந்துகளில் அரைச்சதத்தை நிறைவு செய்த அபிஷேக் ஷர்மா 59 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த வீரர்களும் கணிசமான பங்களிப்பை அளித்ததால் சிரமமின்றி ஹைதராபாத் அணி இலக்கை அடைந்தது. இஷான் கிஷன் 35 ஓட்டங்களிலும், ஹென்ரிச் கிளாசென் 47 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். கமிந்து மெண்டிஸ் 32 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது காயத்தால் பாதியில் வெளியேறினார்.

இந்த நிலையில் ஹைதராபாத் அணி 18.2 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 206 ஓட்டங்கள் குவித்து 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அனிகெட் வர்மா (5 ஓட்டங்கள்), நிதிஷ்குமார் ரெட்டி (5 ஓட்டங்கள்) களத்தில் இருந்தனர். ஏற்கனவே அடுத்த சுற்று வாய்ப்பை பறிகொடுத்து விட்ட ஹைதராபாத்துக்கு இது 4ஆவது வெற்றியாகும்.

கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டிய நெருக்கடியில் களம் கண்ட லக்னோ அணி இந்த தோல்வியின் மூலம் அடுத்த சுற்று வாய்ப்பை இழந்து வெளியேறியது. அந்த அணிக்கு இது 7ஆவது தோல்வியாகும். இதுவரை குஜராத் டைட்டன்ஸ், பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ், பஞ்சாப் கிங்ஸ் ஆகிய அணிகள் அடுத்த சுற்றுக்கு (பிளே-ஒவ்) தகுதி பெற்றுள்ளன. எஞ்சிய ஒரு பிளே-ஒவ் சுற்று இடத்துக்கு மும்பை, டில்லி அணிகள் இடையே நேரடி போட்டி நிலவுகிறது. (எ)



# பரபரப்பான ஆட்டத்தில் பங்களாதேஷ் தோல்வி

ஷார்ஜா, மே 21

2ஆவது ரி - 20 போட்டியில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி யு. ஏ. இ. வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி ஐக்கிய அரபு அமீரகத்தில் (யு.ஏ.இ.) சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் ரி - 20 போட்டியில் பங்களாதேஷ் வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது ரி - 20 போட்டி நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 205 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக தன்சித் ஹசன் 59 ஓட்டங்களும், லிட்டன் தாஸ் 40 ஓட்டங்களும் அடித்தனர். யு.ஏ.இ. தரப்பில் ஜவதுல்லா 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

பின்னர் 206 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி களமிறங்கிய யு.ஏ.இ. அணி சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்தது. இருப்பினும் தொடக்க ஆட்டக்காரரான முகமது வாசீம் அதிரடியாக விளையாடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்து சென்றார்.

யு.ஏ.இ. அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 12 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இதனால் ஆட்டத்தில் பரபரப்பு தொற்றிக்கொண்டது. அந்த ஓவரை வீசிய தன்சிம் ஹசன் 2 முறையற்ற பந்துகளையும், ஒரு அகலப் பந்தையும் வீசி ஒரு சிக்ஸர் விட்டுக்கொடுத்து சொதப்பினார். இதனால் யு.ஏ.இ. அணி 19.5 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 206 ஓட்டங்கள் அடித்து வெற்றி பெற்றது. அதிகபட்சமாக முகமது வாசீம் 82 ஓட்டங்கள் அடித்தார். அவரே ஆட்ட நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையை எட்டியுள்ளது. இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ரி - 20 போட்டி இன்று 21ஆம் திகதி நடைபெறவுள்ளது. (எ)

# இரண்டாவது இடத்துக்கு அல்காரஸ் முன்னேற்றம்



ரோம், மே 21

சர்வதேச ரென்னிஸ் போட்டித் தொடர் தரவரிசையில் கார்லஸ் அல்காரஸ் 2ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

சர்வதேச ரென்னிஸ் சங்கம் வீரர், வீராங்கனைகளின் புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இத்தாலியின் ஜன்னிக் சின்னெர் முதலிடத்தை தக்க வைத்துள்ளார். ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ் ஓர் இடம் முன்னேறி மீண்டும் 2ஆவது இடத்தை பிடித்துள்ளார். இத்தாலி ஓபின் ரென்னிஸில் அல்காரஸ் சம்பியனானார். இதன் மூலம் ஆயிரம் புள்ளிகளை அவர் அள்ளினார். இதனால் அவருக்கு இந்த ஏற்றம் கிடைத்துள்ளது.

இதேவேளை, ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் 3ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். அமெரிக்காவின் ரெய்லர் பிரிட்ஸ் 4ஆவது இடத்திலும், இங்கிலாந்தின் ஜேக் டிராப்பர் 5ஆவது இடத்திலும், ஒலிம்பிக் சம்பியனான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் 6ஆவது இடத்திலும் மாற்றமின்றி தொடர்கின்றனர்.

மகளிர் ஒற்றையர் தரவரிசையில் பெலாரஸின் அரினா சபலெங்கா முதலிடத்தில் நீடிக்கிறார். இந்த ஆண்டில் தொடர்ச்சியாக தோல்விகளைச் சந்தித்து வரும் போலந்தின் இகா ஸ்வியாடெக் 5ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். 2022ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்கு பிறகு அவரது மோசமான தரநிலை இதுவாகும். இதனால் அமெரிக்காவின் கோகோ காப் ஓர் இடம் அதிகரித்து 2ஆவது இடத்தை பெற்றிருக்கிறார். ஜெசிகா பெகுலா 3ஆவது இடத்திலும், இத்தாலியின் ஜாஸ்மின் பௌலினி 4ஆவது இடத்திலும் உள்ளனர். (எ)

# திக்வேஷ்க்கு தடை

லக்னோ, மே 21

லக்னோ வீரர் திக்வேஷ் ரதி ஒரு போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

18ஆவது ஐ.பி.எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் லக்னோவில் நேற்று முன்தினம் அரங்கேறிய 61ஆவது லீக் ஆட்டத்தில் லக்னோ - ஹைதராபாத் அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் அபிஷேக் சர்மாவின் விக்கெட்டை கைப்பற்றிய லக்னோ சுழற்பந்து வீச்சாளர் திக்வேஷ் ரதி கையில் எழுதி, அபிஷேக் சர்மாவை "வெளியே போ" என்ற வகையில் கொண்டாடினார். இதனால் ஆத்திரமடைந்த அபிஷேக் சர்மா, திக்வேஷ் ரதியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பின்னர் நடுவர்கள் இருவரையும் சமாதானப்படுத்தினர்.

இந்த நிலையில் இது குறித்து விசாரணை மேற்கொண்ட ஐ.பி.எல். நிர்வாகம் நடத்தை விதிமுறைகளை மீறியதற்காக திக்வேஷ் ரதிக்கு 2 தகுதி இழப்பு புள்ளிகள் வழங்கியது. இவர் ஏற்கனவே நடப்பு தொடரில் இரண்டு முறை விதிமுறைகளை மீறியதற்காக 3 தகுதி இழப்பு புள்ளிகள் பெற்றுள்ளார். இதனையும் சேர்த்து மொத்தம் 5 தகுதி இழப்பு புள்ளிகள் பெற்றுள்ளார்.

இதனால் அவருக்கு ஒரு போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (எ)



# 150 விக்கெட் வீழ்த்தி ஹர்ஷல் சாதனை



லக்னோ, மே 21

ஐ. பி. எல். வரலாற்றில் அதிவேகமாக 150 விக்கெட்கள் கைப்பற்றிய பந்து வீச்சாளர் என்ற மாபெரும் வரலாற்று சாதனையை ஹர்ஷல் பட்டேல் படைத்துள்ளார்.

ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 61ஆவது லீக் ஆட்டத்தில் லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் - சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதின. இதில் ஹர்ஷல் பட்டேல் ஒரு விக்கெட் வீழ்த்தினார்.

இது ஐ. பி. எல். தொடரில் அவரது 150ஆவது விக்கெட்டாக பதிவானது. இந்த 150 விக்கெட்களை அவர் 2,381 பந்துகளில் வீழ்த்தியுள்ளார்.

இதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் அதிவேகமாக 150 விக்கெட்கள் கைப்பற்றிய பந்துவீச்சாளர் என்ற மாபெரும் வரலாற்று சாதனையை அவர் படைத்துள்ளார்.

அந்தப் பட்டியல் வருமாறு,

1. ஹர்ஷல் பட்டேல் - 2,381 பந்துகள்,
2. லசித் மலிங்க - 2,444 பந்துகள்,
3. சாஹல் - 2,543 பந்துகள்,
4. பிராவோ - 2,656 பந்துகள்,
5. பும்ரா - 2,832 பந்துகள். (எ)

## தமிழ்மக்களின்...

அமெரிக்க மற்றும் சுவிஸ் நாடுகளின் தூதுவர்களுடன் நேற்று செவ்வாய்க்கிழமை சந்திப்புக்களை முன்னெடுத்தனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் தேசிய மக்கள் முன்னணி பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், சிரேஷ்ட சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் ஆகியோர் ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் மற்றும் அமெரிக்க தூதுவர் ஆகியோரைச் சந்தித்தனர்.

இதனைத் தொடர்ந்து பிற்பகலில் சுவிற்சர்லாந்து தூதரகத்தில் அந்நாட்டு தூதுவரை சந்தித்து தமிழ் மக்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான நிரந்தரத் தீர்வு, வடக்கில் தற்போது அரசாங்கம் தமிழ் மக்களின் காணி அபகரிப்பை நிறுத்தவேண்டும் என்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர். (அ)

## வடக்கு...

காணி உரித்து தொடர்பான பிரச்னையை மிக விரைவாக தீர்க்க வேண்டியுள்ளது.

ஏனைய பகுதிகளில் 98 முதல் 100 வீதம் வரை காணி உரித்து பிரச்னைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

வடக்கில் 30.36 வீதமான காணி உரித்துப் பிரச்னையே தீர்க்கப்பட்டுள்ளது. கிழக்கில் 81.47 காணி உரித்துப் பிரச்னை தீர்க்கப்பட்டுள்ளது.

விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் காணி அபகரிப்பை ஒருபோதும் செய்யமாட்டோம். இதனை பாராளுமன்றத்துக்கு பொறுப்புடன் கூறுகிறேன்.

காணி தொடர்பில் ஆவணங்கள் இருப்பின் அல்லது ஏதாவது தகவல் இருப்பின் அவர்களுக்கு காணி உரித்து வழங்குவதுதான் இதன் நோக்கமாகும்.

இது தொடர்பில் பிரதமர் தலைமையில் எதிர்வரும் 23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது. உங்களது கோரிக்கையை அங்கு முன்வைப்பீர்களானால் அது குறித்து ஆராய முடியும்.

இங்கே வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி ஊடாக அரசாங்கம் காணிகளை அபகரிக்கிறது என நினைப்பீர்களானால் அது அவ்வாறில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

காணி உரித்து தொடர்பான பிரச்னையை தீர்த்து அவற்றை பெற்றுக் கொடுப்பதற்கே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை தெளிவுபடுத்திக்கொள்ளுங்கள்.

பிரச்னையை தீர்த்து காணி உரித்து வழங்கும் நடவடிக்கைக்கு நீங்கள் ஒத்துழைப்பு வழங்குங்கள்.

வர்த்தமானியை இடைநிறுத்த முடியும். ஆனால் அதன் ஊடாக உங்களை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்த மக்களுக்கு காணி வழங்கப்படுவது தாமதமாகும்.

உங்களுக்கு போதியளவு பதில் வழங்கியிருப்பதாக நான் நினைக்கிறேன். நீங்கள் உருவாக்கியுள்ள மாயைக்கு பதிலளிக்கவேண்டிய கடமை எனக்கு கிடையாது.

வடக்கு-கிழக்கு மக்களுக்கு காணி உரித்து பிரச்சினையை தீர்ப்பதற்காகவே வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளதை என்பதை தான் என்னால் கூற முடியும்.

காணி தொடர்பான ஆவணங்கள் வைத்திருப்போருக்கு உரித்து வழங்கப்படும். அவ்வாறு இல்லாதவர்களுக்கு வேறு ஏதேனும் வகையில் தகவல்களைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும். காணியை அபகரிக்கப்போவதில்லை.

எந்தவொரு நபரதும் எந்தவொரு காணியையும் அரசாங்கத்தால் அபகரிக்கப்பட மாட்டாது என்பதை பொறுப்புடன் கூறுகிறேன் - என்றார். (அ)

## அரசின்

கேள்விக்கு பதில் அளித்தபோதே அவர் இதனை தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் கடமையை நிறைவேற்றுவதற்காக வந்தோம். சமாதானத்திற்காகவே யுத்தம் போர் தொடுத்தோம். எதிர்காலத்தில் இவை மீண்டும் நடைபெறுமா? இல்லையா? என்பதைச் சொல்ல முடியாது. அது வரும் அரசாங்கங்களைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும். யுத்தம் என்பது ஒரு துயரச் சம்பவம். ஆனால், எங்கள் இராணுவம் வெற்றி பெற்றது. யுத்தத்தில் ஒரு தரப்பு வெற்றி பெற வேண்டும் அல்லவா? தேசிய பாதுகாப்பு? அதில் எந்தப் பிரச்னையும் இல்லை. நாட்டைப் பாதுகாக்க வேண்டும்-என்றார். (அ)

## காங்கேசன்...

பலாலி வீதி திறக்கப்பட்ட நிலையில், 764 மற்றும் 769 ஆகிய வழித்தடங்களின் சேவைகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பில் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படாமையடுத்து, அது தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

764, 768 மற்றும் 769 ஆகிய வழித்தடங்களில் சேவைகளை நடத்தும் பஸ்களின் உரிமையாளர் சங்கத்தினர் கலந்துகொண்டு தமது நிலைப்பாடுகளைத் தெரியப்படுத்தினர். ஒற்றுமையாக இணைந்து தங்களது முடிவுகளை பேருந்து சங்கங்கள் அறிவித்தால் அதைச் செயற்படுத்த தயாராக இருப்பதாகத் தெரிவித்த ஆளுநர், இல்லாவிடின் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரியப்படுத்தினார்.

பஸ் சங்கங்களிடையே இணக்கம் எட்டப்பட்டிருக்காத நிலையில், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையால் அனுமதிக்கப்பட்ட வழித்தட அனுமதிக்கு அமைவாக, 764 மற்றும் 769 ஆகிய வழித்தடங்களின் பஸ்கள் யாவும் காங்கேசன்துறை ரயில் நிலையத்திலிருந்து தமது சேவைகளை ஆரம்பிக்கும். 764 வழித் தட பஸ்கள் அங்கிருந்து பலாலி வீதியூடாக யாழ்ப்பாணத்தை வந்தடையும். 769 வழித் தட பஸ்கள் அங்கிருந்து காங்கேசன்துறை வீதியூடாக யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

இதேவேளை 764 மற்றும் 769 ஆகிய இரண்டு வழித்தட பஸ்களும் யாழ்ப்பாண நகரில் ஒரேயிடத்திலிருந்து புறப்படுவதில் சிக்கல்கள் இருப்பதாக 769 வழித்தடப் பஸ் சங்கத்தினரால் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து, இது தொடர்பில் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளருடன் கலந்துரையாடி மாற்றிடத்தை விரைவில் ஒழுங்கு செய்துதருவதாக வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் க. மகேஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை, ஆளுநரால் அறிவிக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக பேருந்து சேவையை ஒழுங்குபடுத்தி கண்காணிப்பதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் உறுதியளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் மற்றும் பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட நீண்டதூர பஸ் சங்கம், 764, 768, 769 வழித்தட பஸ் சங்கங்கள், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், காங்கேசன்துறை மற்றும் பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## போரில் பாதிக்கப்பட்டவர்கள்...

கடந்த 16 ஆண்டுகளாக அவர்கள் செய்து வருவது போலவே, நீதிக்காகவும் அவர்கள் குரல் கொடுத்தனர்.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மனித உரிமைகள் குழுக்களால் போர்க்குற்றங்கள் மற்றும் அரசு பாதுகாப்புப் படைகளால் மனித உரிமை மீறல்கள் குறித்து ஏராளமான ஆதாரங்கள் சேகரிக்கப்பட்ட போதிலும், அடுத்தடுத்த அரசாங்கங்கள் எந்தவொரு நம்பகமான பொறுப்புக்கூறல் செயல்முறையையும் தொடங்கத் தவறிவிட்டன.

இதற்கிடையில், தமிழ் ஆர்வலர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்கள் தொடர்ந்து அடக்குமுறை மற்றும் பிற மீறல்களை எதிர்கொள்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான போர் இரு தரப்பினராலும் பரவலாக அத்துமீறல்களாக குறிக்கப்பட்டது.

இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளை நெருங்கி வந்து, இறுதியில் மே 18, 2009 அன்று அவர்களை தோற்கடித்தபோது, சரணடைந்த நூற்றுக்கணக்கான போராளிகள் படுகொலை செய்யப்பட்டனர். பாலியல் வன்கொடுமை செய்தனர். மற்றும், பலவந்தமாக காணாமல் போகச் செய்தனர்.

புலிகளால் போர் மண்டலத்தில் சிக்கியிருந்த பொதுமக்களை இராணுவம் கண்மூடித்தனமாக ஷெல்களால் தாக்கியது. பொதுமக்கள் மனித கேடயங்களாகப் பயன்படுத்தப்பட்டனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில், முந்தைய நிர்வாகங்களிலிருந்து விலகி, அடக்குமுறை மற்றும் பாகுபாட்டின் மரபை நிவர்த்தி செய்வார் என்று நம்பி, பல தமிழர்கள் அநுர குமார திஸாநாயக்கவுக்கு ஜனாதிபதி பதவிக்காக வாக்களித்தனர்.

அவர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம் மற்றும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம் உள்ளிட்ட முந்தைய அரசாங்கங்களின் தோல்வியுற்ற முயற்சிகளை திசாநாயக்க அரசாங்கம் ஆதரித்துள்ளது, ஆனால், அவை எந்த முன்னேற்றத்தையும் அடையவில்லை.

இந்த நிறுவனங்கள் பல பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன, அவர்கள் அவற்றை தோல்வியுற்ற வாக்குறுதிகளின் ஒரு பகுதியாகவே பார்க்கிறார்கள்.

இதற்கிடையில், தமிழர்களை குறிவைத்து நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அரசாங்கம் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

ஜி.எஸ்.பி பிளஸ் திட்டங்களின் கீழ் ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கு வரி இல்லாத அணுகலைப் பேணுவதற்கான நிபந்தனையாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இந்த கொடூரமான சட்டத்தை இரத்து செய்வதாக அரசாங்கம் உறுதியளித்திருந்தது.

பொறுப்புக்கூறல் தொடர்பான முன்னேற்றத்தை ஐ.நா மனித உரிமைகள் ஆணையர் அலுவலகம் அறிக்கையிட்டு கண்காணிக்க வேண்டும் என்றும், எதிர்கால வழக்குகளில் பயன்படுத்த சர்வதேச குற்றங்களுக்கான ஆதாரங்களை சேகரிக்க இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தை நிறுவ வேண்டும் என்றும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் உத்தரவிட்டது.

இலங்கையில் முன்னேற்றம் இல்லாததால், சர்வதேச குற்றங்களைச் செய்பவர்களை பொறுப்புக்கூற வைப்பதற்கு புதுப்பித்தல் மிக முக்கியம்.

சபையின் தலையீடு நாட்டை “பிளவுபடுத்தும் மற்றும் ஊடுருவும்” என்று திஸநாயக்க அரசாங்கம் எதிர்த்துள் ளது.

எனவே, மதிப்பிழந்த உள்நாட்டு முயற்சிகள் செயல்படுவதாக பாசாங்கு செய்வதற்குப் பதிலாக, பொறுப்புக்கூறல் திட்டத்தை புதுப்பிப்பதற்கான தீர்மானத்தை ஆதரிப்பதன் மூலம் பொறுப்புக்கூறலுக்கான தனது உறுதிப்பாட்டை அரசாங்கம் நிரூபிக்க வேண்டும் - என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## அரசாங்கத்துக்கு...

பதிலளிப்பதற்கு அவர் நாட்டுக்கு வரவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பசில் ராஜபக்ஷவுக்கு நாட்டுக்கு வருவதற்கு உரிமை இருக்கிறது. அவர் வரவில்லை எனில், தலைமறைவாக உள்ளதாகக் கூறுகின்றனர்.

வந்தால், நாமலுக்கு உதவுவதற்காக வருவதாகக் கூறுகின்றனர். அவர் நாட்டுக்கு வரவேண்டும். அரசாங்கத்தால் அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களுக்கு பதிலளிக்கவேண்டும்.

சவால்களை எதிர்கொள்வதோடு, அவற்றுக்கு பதிலளிக்கவேண்டும். அவர் தொடர்பான பிரச்னைகளுக்கு நாமல் ராஜபக்ஷவுக்கோ அல்லது மகிந்த ராஜபக்ஷவுக்கோ பதிலளிக்க முடியாது.

தன் மீதான குற்றச்சாட்டுகளை நேரடியாக எதிர்கொண்டு, அவற்றுக்கு பதிலளித்து, தான் குற்றமற்றவர் என்பதை அவர் நிரூபிக்கவேண்டும்.

அப்போது தான் இந்த அரசாங்கத்துக்கு யார் சரி, யார் தவறு என்பது புரியும். பஸில் ராஜபக்ஷ அமெரிக்காவில் இருப்பதாகவும், தற்போது தலைமறைவாக இருப்பதாகவும், நாட்டுக்கு வர மாட்டார் என்றும் அரசாங்கம் கூறிக்கொண்டிருக்கும். அவர் நாட்டுக்கு வந்துவிட்டரெனில் அந்த பேச்சுக்களும் முடிந்து விடும்.

நாமல் ராஜபக்ஷவுக்கு உதவுவதற்கு பஸில் நாட்டுக்கு வரவேண்டிய தேவை இல்லை. அமெரிக்காவிலிருந்து கூட உதவ முடியும்.

எவ்வாறிருப்பினும் இந்த அரசாங்கத்துக்கு பதிலளிப்பதற்கு அவர் நாட்டுக்கு வரவேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும் - என்றார்.(அ)

## யாழில்...

தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவருக்கு கடந்த 17ஆம் திகதி உடல் சுகவீனம் ஏற்பட்டது. இந்நிலையில் சிகிச்சைக்காக நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை மானிப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

கிருமித்தொற்றினால் உடற்கூறுகள் செயலிழந்ததால் மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (அ-05)

## இரத்த...

என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் மது மற்றும் புகைப் பழக்கத்துக்கு அடிமையானவர். இந்நிலையில் நேற்று அதிகாலை 4 மணியளவில் உடல் சுகவீனம் ஏற்பட்டு இரத்த வாந்தி எடுத்துள்ளார். பின்னர் காலை 5 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி பி.ப 1.30 மணியளவில் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். சாட்சியங்களை யாழ்ப்பாணம் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(அ-05)

ஈழநாடு
Eelanadu

# எதிரணி எம்.பிக்களின் உயிருக்கு அச்சுறுத்தல்!

## சபையில் தயாசிறி குற்றச்சாட்டு



கொழும்பு, மே. 21

**அரசாங்கத்தை விமர்சிப்பதால் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன்வைத்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் எல்லா இடங்களிலும் துப்பாக்கிப் பிரயோகங்கள் இடம்பெறுகின்றன. என்னைக் கொலை செய்து விடுவார்கள் என எமது வீட்டாரும் உறவினர்களும் ஆதரவாளர்களும் கூறுகிறார்கள்.

அரசாங்கத்தை விமர்சிப்பதால் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இது பாரதூரமான பிரச்னையாகும். இந்த விடயம் தொடர்பில் சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு வந்தோம். அமைச்சின் பாதுகாப்புப் பிரிவுக்கு அவர் இது தொடர்பில் அறிவுறுத் தினாலும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஏதாவது ஒரு பிரச்னை ஏற்பட்டு ஒருவர் உயிரிழந்த பிறகு அதைப் பற்றி பேசாதீர்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார்.

இதேவேளை, தயாசிறி ஜயசேகரவின் உரையை அடுத்து சபையில் அமைதியின்மை ஏற்பட்டது. சபையின் நடைமுறைகளை அவர் பின்பற்றவில்லை என ஆளும் தரப்பினர் குற்றம் சுமத்தினர். இதன் காரணமாக ஆளும், எதிர்த்தரப்பினர் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். (அ)

## குஷ் போதைப்பொருளுடன் மூன்று பெண்கள் சிக்கினர்!

கொழும்பு, மே. 21

சுமார் 12 கோடி ரூபா பெறுமதியான குஷ் போதைப் பொருளுடன் 3 பெண்கள் கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலன்னாவ, வெல்லம்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 18, 46, மற்றும் 56 வயதான 3 பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு இந்தியாவிலிருந்து வந்த குறித்த பெண்கள் 12 கிலோகிராம் குஷ் போதைப்பொருளை குளிரூட்டி மற்றும் மின் உபகரணங்களுக்குள் மறைத்து வைத்து கொண்டுவந்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையத்தின் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவிடம் ஒப்படைத்துள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித்தது. (அ)

## மதுபோதையுடன் மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் சாரதி கைது!

கொழும்பு, மே. 21

மதுபோதையுடன் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற சிசுசெரிய பஸ் சாரதி கைது செய்யப்பட்டார்.

கட்டுபெத்த நகரில் நடத்தப்பட்ட சோதனையில் குறித்த சாரதி கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சாரதி ரதலியகொட பகுதியைச் சேர்ந்த 52 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபர் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் சிசுசெரிய பஸ்ஸில் 16 மாணவர்களும் 2 பெற்றோரும் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## இலங்கைக்கு கடத்தி வரப்பட்ட வாசனைப் பொருட்கள் சிக்கின!

கொழும்பு, மே. 21

தமிழக கடற்பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 320 கிலோ சுக்கு மற்றும் 150 கிலோ ஏலக்காய் என்பவற்றை இலங்கை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது கண்ணாடி இழைப்படகு ஒன்றும் கைப் பற்றப்பட்டுள்ளது. கடற்படையினர் கண்காணிப்புப் பணியின்போது சந்தேகத்திற்குரிய முறையில் புத்தளம்- கல்பிட்டி கரை பகுதியில் நிறுத்தி வைககப்பட்டிருந்த ஒரு படகை சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, 12 மூடைகளில் 320 கிலோ சுக்கு மற்றும் 150 கிலோ ஏலக்காய் இருந்ததை அவர்கள் கண்டறிந்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட சுக்கு மற்றும் ஏலக்காய் என் பன சுங்கத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளன. (அ)

## ரயில் போக்குவரத்து தடை!

கொழும்பு, மே. 21

ஹபரணை-ஹத்தரஸ்கொட்டுவ இடையில் ரயில் தடம் புரண்டமையால் ரயில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது.

கொழும்பு கோட்டையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த தபால் ரயில் தடம் புரண்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

காட்டு யானை மோதியதில் ரயில் தடம் புரண்டிருக்கலாம் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

## தேசபந்து தென்னக்கோனை கொலை செய்ய சதித்திட்டம்!

### விசாரணை ஆரம்பம் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, மே. 21

பதவி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கொலை செய்வதற்கான சதித்திட்டம் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

அத்தோடு, தென்னக்கோனை கொலை செய்வதறகான பொறுப்பு சிறைத்தண்டனை அனுபவிக்கும் சமன் குமார என்பவரிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சினைப்பர் தாக்குதல் மூலம் கொலை செய்யதிட்டமிட்டுள்ளனர் என்ற தகவல் பொய்யானது என உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் ஆனந்த விஜயபால தெரிவித்தார். (அ)

## கெஹலியவுக்கு மறியல் நீடிப்பு!

கொழும்பு, மே. 21

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவை ஜூன் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி நேற்று உத்தரவிட்டார்.

இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தாக்கல் செய்த மூன்று வழக்குகள் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, சிறைச்சாலை அதிகாரிகளால் நேற்று காலை கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில்

ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போது வழக்கை விசாரித்த கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டார். (அ)

## இலங்கைக்கு வருகிறார் நியூசிலாந்து அமைச்சர்



கொழும்பு, மே. 21

நியூசிலாந்தின் பிரதிப் பிரதமரும், வெளியுறவு அமைச்சருமான வின்ஸ்டன் பீற்றர்ஸ் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த வார இறுதியில் இலங்கை, ஆஸ்தி ரேலியா, நேபாளம் மற்றும் இந்தியாவுக்கு அவர் விஜயம் செய்ய உள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இலங்கை விஜயத்துக்கான சரியான திகதி தொடர்பில் தகவல்கள் வெளியாகவில்லை.

நியூஸிலாந்து ஊடக தகவல்களின்படி, பீற்றர்ஸ் இந்த மாதம் 23 ஆம் திகதி நியூசிலாந்திலிருந்து புறப்பட்டு மே 31 அன்று திரும்புகிறார் என கூறப்படுகிறது.

இதன்படி, 2013ஆம் ஆண்டுக்குப் பின்னர், இலங்கைக்கு வரும் நியூசிலாந்து வெளியுறவு அமைச்சராக வின்ஸ்டன் பீற்றர்ஸ் விளங்குகிறார்.

நியூசிலாந்தும், இலங்கையும் கடந்த ஐந்து ஆண்டுகளில் கொழும்பு மற்றும் வெலிங்டனில் தூதரகங்களைப் திறப்பது உட்பட இரு தரப்பு உறவை மேம்படுத்தியுள்ளன.

இந்த நிலையில், நிலையான, பாதுகாப்பான மற்றும் வளமான இந்தோ - பசுபிக் பகுதிக்கு பங்களிக்க நியூசிலாந்து, பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று பீற்றர்ஸ் கூறியுள்ளார். (அ)

## மின் கட்டணத்தைக் குறைக்க வழியிருந்தும் ஏன் அதிகரிப்பு?

### மின்சார நுகர்வோர் சங்கம் கேள்வி




கொழும்பு, மே. 21

இலங்கை மின்சார சபை 18.3 சதவீத மின்சார கட்டணத்தை அதிகரிக்க முன்மொழிந்துள்ள போதிலும், மின்சார கட்டணத்தைக் குறைந்தபட்சம் 20 சதவீதம் குறைப்பதற்கான வழி இருப்பதாக மின்சார நுகர்வோர் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் பொதுச் செயலாளர் சஞ்சீவ தம்மிக இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின்சார சபை கடந்த 2023ஆம் ஆண்டு 57 பில்லியன் ரூபாவையும், 2024ஆம் ஆண்டு 144 பில்லியன் ரூபாவையும் இலாபமாக ஈட்டியது.

இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் 22 வீத கட்டணக் குறைப்பைத் தொடர்ந்து, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, மின்சார சபையின் 200 பில்லியன் ரூபாவில் இருந்து 51 பில்லியன் ரூபாவை ஆறு மாத காலத்திற்குப் பயன்படுத்த அனுமதித்தது.

எனினும் 18 பில்லியன் ரூபாவை மாத்திரமே மின்சாரசபை பயன்படுத்திய போதிலும் சுமார் 183 பில்லியன் ரூபாய் மீதமுள்ளது.

இந்நிலையில் எதற்காக மின்சார கட்டணத்தை அதிகரிக்க வேண்டும்? - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.